விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 18 புதன்கிழமை (02.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 014

RAMCO
MADRAS CEMENTS LTD
ரா ம் கோ
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போர்ட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கையின் நீதித்துறை கடுமையாக தாக்கப்படுகிறது



## ஐ.நா.பிரதிநிதி கவலை

(நியூயோர்க்)

இலங்கையில் நீதிபதிகளும் நீதித்துறை சார்ந்த அதிகாரிகளும் கூடுதலான அச்சுறுத்தல் மற்றும் தாக்குதலுக்கு உள்ளாகின்ற சம்பவங்கள் நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு ஊறு ஏற்படுத்தும் வகையில் அமைந்துவிடக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரதிநிதி கவலை தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## சகலரது தேவைகளும் இனம் காணப்படும்–கோத்தா

(கொழும்பு)

அரசாங்கம், சகல தரப்பினரதும் தேவைகளை இனம்கண்டு செயற்படுவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவர் சிவசங்கர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை

### பொலிஸாரின் தடுப்பிலேயே தொடர்ந்தும் உள்ளார்

(கிளிநொச்சி)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தமிழ் வைத்தியர் இ.சிவசங்கரை நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் மாங்குளம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணை என்று கூறி அவரைத் தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த 29-ம் திகதி இராணுவத்திலிருந்து விலக விரும்பும் தமிழ் யுவதியுடன் கொக்காவில் முகாமிற்குச் சென்ற குறித்த வைத்தியர் அங்கு வைத்து குற்றச்சாட்டு ஒன்றின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டார்.

பின்னர் மாங்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட இவர் கடந்த 5 நாட்களாக தொடர்ந்தும் பொலிஸாரின் தீவிர விசாரணைப் பிரிவில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

இந்நிலையில் நேற்றைய தினம் அவர் முல்லைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்தினருக்கு சர்வதேச பயிற்சிகள்–ஜகத் ஜெயசூரிய

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கும் இந்த ஆண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் வழங்கப்படும் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய தெரிவித் துள்ளார். அவர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இராணுவத்திற்கான உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் அளிக்கப்படும் பயிற்சி வாய்ப்புக்களே அதிகரிக்கப்படும். தனிப்பயிற்சி, படையணி பயிற்சி, கூட்டு இராணுவப் பயிற்சிகள், சர்வதேசப் பயிற்சி, மொழிப் பயிற்சி ஆகிய பயிற்சிகளே அதிகரிக்கப்படும்.

இவை எமது நாட்டின் ஸ்திரத்தன்மையை வலுவாக பேணுவதற்கு மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் முக்கியமானதொன்று எனவும் குறிப்பிட்டார். (செ–1)

## அரச ஊழியர்களின் சேவை முக்கியமானது–லலித்

(கொழும்பு)

பொது மக்களுக்கு வழங்கும் சேவையை உயர்மட் டத்தில் வழங்க அரச ஊழியர்கள் முன்வர வேண்டும் என ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

13 லட்சம் அரச ஊழியர்களை நாடி பொது மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் தமது சேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவென வருவதாக அவர் குறிப்பிட்டார்.

2013-ம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து, (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்த ஆண்டிலாவது நிரந்தர தீர்வைப் பெற தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைய வேண்டும்

### கனேடிய மனிதஉரிமை மையம் வேண்டுகோள்

(ஒட்டவா)

2013ஆம் ஆண்டானதுஈழத்தில்வாழும்தமிழ் இனத்தின் நிரந்தர தீர்வுக்கான ஆண்டாகவும், இதுவரை உயிரிழந்த உறவுகளின் ஆத்ம விருப்பிற்கு விடைதேடும் ஆண்டாகவும் அமைய அனைத்து தமிழ் அமைப்புக்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் எனக் கனேடிய மனிதவுரிமை மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

2012ஆம் ஆண்டு எங்களிற்கு கற்றுத்தந்த பாடமாக அமைந்ததே, உலக ஓட்டத்தின் இன்றையபோக்கின் முக்கிய மாற்றமாக கருதப்படும் ஐக்கிய நாடுகள் அவையின் உள்ளக அறிக்கை 2009ஆம் ஆண்டை முள்ளிவாய்க்கால் அவலத்தில் அதன் அசமந்தப் போக்கினை சுட்டிக் காட்டிச் சென்றது என்பதைச் சுட்டிக்காட்டிய கனேடிய மனிதவுரிமை மையம்,

இந்த குற்றச்செயலிலிருந்தும், குற்றவுணர்விலிருந்தும் ஐக்கிய நாடுகள் அவையோ அல்லது சர்வதேசமோ தங்களது பார்வையை உலக பந்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீதான முறைப்பாடுகள் இணைய மனுக்களாக அமெரிக்காவுக்கு!

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதியை நேரடியாகச் சென்றடையும் வகையில் திறக்கப்பட்ட We the People என்ற வெள்ளை மாளிகையின் இணையத்தளத்துக்கு மனுக்கள் சென்றடைந்ததன் பின்னரே இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்காவின் கரிசனை அதிகரித்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இணையத்தளம் ஒன்று இதனை தெரிவித்துள்ளது. ஒரு ஆண்டு கடந்துள்ள இந்த இணையத்தளத்துக்கு முதல் மாதத்திலேயே 25 ஆயிரம் கையொப்பங்களுடன் கூடிய மனுக்கள் அனுப்பப்பட்டன.

அமெரிக்க அஞ்சல் திணைக்களத்தினால் பதிவு செய்யப்படும் இந்த மனுக்களில் பெரும்பாலானவற்றுக்கு ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகத்தில் இருந்து பதில்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த இணையத் தளத்துக்கு (20ஆம் பக்கம் பார்க்க)



இந்தியாவில் பேருந்தில் வைத்து ஒரு குழுவினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு உயிரிழந்த 23 வயதான மருத்துவ மாணவிக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சகல பொலிஸாருக்கும் ரூ.4500 கொடுப்பனவு

(கொழும்பு)

சகல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் மாதாந்த கொடுப்பனவாக குறைந்த பட்சம் 4500 ரூபாய் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி. பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (செ–1)

## ஆங்கில கற்கைக்கான விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஆங்கில கற்கை நெறிகளுக்கான மீள்பதிவுகள் இன்று புதன் கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மற்றும் 4–ம் திகதி வெள்ளிக்கிழமையும் இலங்கைதிறந்தபல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இக்கற்கை நெறிக்கு ஏற்கெனவே விண்ணப்பித்து இறுதிப் பரீட்சைக்கு தோற்றியவர்களும் தங்களுடைய மீள் பதிவுகளை தவறாது மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (செ–2)

## சிங்கள கற்கைக்கான விண்ணப்பம்கோரல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஆரம்ப மற்றும் அடிப்படைச் சிங்களக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறியினைத் தொடர்வதற்கு 18 வயதினைப் பூர்த்தி செய்த யாவரும் விண்ணப்பிக்க முடியும் எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கற்கைநெறிக்கான விண்ணப்ப படிவங்களை இலங்கை திறந்தபல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர் வரும் 15–ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (செ–2)

## வணிக கற்கைக்கான விண்ணப்பம்கோரல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சிறுவணிக முகாமைத்துவச்சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

வியாபார நிர்வாகமாணிப் பட்டத்திற்கு இட்டுச்செல்லும் இவ்வடிப்படைக் கற்கை நெறிக்கு இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இக்கற்கை நெறியில் 18 வயதைப் பூர்த்தி செய்த யாவரும் விண்ணப்பிக்க முடி யும்.

இதற்கான விண்ணப்ப முடிபுத்திகதி எதிர்வரும் 5–ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்களையாழ்பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார். (செ– 2)

# திவிநெகும சட்டமூலம் 15–ம் திகதி நிறைவேற்றப்படும்



திவிநெகும(வாழ்வின் எழுச்சி) சட்டமூலம் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 15ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பின்னர் அதனை அமுல்படுத்துவதற்காக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும் என பொருளதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மாத்தறையில் தெரிவித்துள்ளார்.

திவிநெகும வேலைத்திட்டம் தொடர்பாக மாத்தறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் மாத்தறை வாடி வீட்டில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

சர்வதேச சக்திகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நிலையான இந்த அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த சட்டமூலத்தின் ஊடாக வறிய மக்கள் வலுப்படுத்தப்படுவார்கள். இதனைத் தடுத்து ;நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சர்வதேச சக்திகளை தோற்கடிக்க வேண்டுமாயின் இந்த மக்களின் ஒத்துழைப்பு அரசாங்கத்திற்கு அவசியம். இதன் மூலம் சர்வதேச சக்திகளிடம் இருந்து தப்பிக்க முடியும்.

இந்த அரசாங்கத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் கவிழ்க்க முடியாது. அரசு தவறு செய்து கவிழ்ந்தாலேஒழிய எதிர்க் கட்சிகளினால் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது.

இன்று எதிர்க் கட்சிகள் பிளவுபட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் பிளவுபட்டுள்ளன.

திவிநெகும சட்ட மூலத்தினால் நாட்டில் வளர்ச்சிளை ஏற்படுத்த முடியும். நாட்டில் யார் தவறு செய்தாலும் தண்டனை கிடைக்கும். சட்டம் அனைவருக்கும் சமமானது.

எனவும் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (செ–1)

# 13 வயது சிறுமி மீது வன்புணர்வு முயற்சி!

## 60 வயது முதியவர் கைதானார்

(கனகபுரம்)

சிறுமி மீது வன்புணர்விற்கு முயன்ற முதியவர் தர்மபுரம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நிகழ்ந்துள்ளது. கிளிநொச்சி தர்மபுரம் 3–ம் யுனிற் பகுதியைச் சேர்ந்த 13 வயதுச்சிறுமி மீதே அவ்விடத்தில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த 60 வயதுடைய முதியவர் இவ்வாறு வன்புணர்வு முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த சிறுமியின் தாயார் கூலி வேலைக்காக வெளியில் சென்றுள்ளார். இச்சிறுமியும் அவரின் இரு இளைய சகோதரிகளும் வீட்டிலே இருந்துள்ளனர். இந்நிலையில் அங்கு வந்த குறித்த முதியவர் தாயைப் பற்றி விசாரித்த பின் சிறுமியின் மற்றைய சகோதரிகளையும் பணம் கொடுத்து கடைக்கு அனுப்பியுள்ளார். பின்னர் நித்திரையாக இருந்த 13 வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளார். விழித்துக் கொண்ட சிறுமியின் கூக்குரலைக் கேட்டு அயலவர் அங்கு வந்ததால் சிறுமி காப்பாற்றப்பட்டார். இதனை யடுத்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின்படி விரைந்து செயற்பட்ட தர்மபுரம் பொலிசார் குறித்த முதியவரைக் கைது செய்தனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தந்தையார் அற்ற நிலையில் தாயுடனே இச் சிறுமியும் அவரது சகோதரிகளும் வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ– 259)

## 10 பவுண் நகை மன்னாரில் கொள்ளை

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமமொன்றில் இனந்தெரியாத நபர்கள் சிலர் வயோதிபத் தம்பதியினர் மீது கண்மூடித்தனமாக தாக்கி விட்டு தங்க நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இலுப்பைக்கடவை கள்ளியடி கிராமத்தில் 4 பேர் கொண்ட குழுவினர் குறித்த வயோதிபரின் வீட்டினுள் புகுந்து அவர்களை கண்மூடித்தனமாக தாக்கி சும்மார் 10 பவுண் நகைகளைச் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக இலுப்பைக்கடவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எஸ். சுப்பிரமணியம் (வயது–63), திருமதி சுப்பிரமணியம் ராஜேஸ்வரி (வயது–56)ஆகிய வயோதிப தம்பதியினரே படுகாயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வயோதிப தம்பதியினரின் பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ– 11)

## நீரில் மூழ்கி இருவர் பலி!

(காலி)

தங்கொட்டுவ, மெட்டிகொட்டுவ மங்கடக்க ஆற்றில் நேற்று குளிக்கச் சென்ற இருவர் நீரில் பலியாகியுள்ளனர். அந்த இருவரினதும் சடலங்களையும் மீட்டுள்ளதாக தங்கொட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஐந்து குழந்தைகளின் தந்தையான பெர்னாண்டோ (வயது–51) மற்றும் சுரேஷ் (வயது–50) ஆகிய இருவரே இவ்வாறு பலியாகியுள்ளதாக தெரிவித்த தங்கொட்டுவ பொலிஸார் இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ–11)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சைகள்–2010**

பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி -I -2010 (வெளிவாரி)

மேற்படி பரீட்சைகளை 18.01.2013 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 02.02.2013 (சனிக்கிழமை)வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 15.01.2013 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
01.01.2013
(சி–1991)



**பிள்ளையார் இன்**

இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

40% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(சி-1976)



**NORTH LEAD EDUCATIONAL CENTER**

**சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம்**

A/L பரீட்சை முடித்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், அரசமொழி சிங்கள பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக பேச, எழுத, வாசிக்க ஆரம்பத்தில் இருந்து அனுபவமான ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். பரீட்சை முடிவின் பின் சான்றிதழ் வழங்கப்படும்

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460



**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் ம.யேசுரட்ணம்**



அண்மையில் இறைவனடி சேர்ந்த எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் ம.யேசுரட்ணம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்தி, திருப்பலி இன்று (02.01.2013)காலை 9 மணிக்கு இளவாலை மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

- பாடசாலைச்சமூகம், யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை,
(1365)



**கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்**

**நீரிழிவு நோயாளர்களின் கவனத்திற்கு**

மேற்படி எமது வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையமானது அதன் மருத்துவ நடவடிக்கைகளை 01.01.2013 தொடக்கம் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாட்களாக மட்டுப்படுத்தியுள்ளது என்பதனை எமது நோயாளர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

பணிப்பாளர் சபை
(சி–1989)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனம் ஏமாற்றும்

ஒரு ஊரிலே புகழ்பெற்ற பத்திரிகையாளர் இருந்தார். அவர் ஒருநாள் திடீரென இறந்து போனார். அதன்பின் நேராக சொர்க்கத்துக்குப் போனார். சொர்க்கத்தின் வாசலிலே நின்ற சென்.பீற்றர் அவரைத் தடுத்து நிறுத்தினார்.

''இதோ பார்; ஏற்கனவே இங்கே 12 பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களே இங்கு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் சொர்க்கத்திலே திடுக்கிடும் செய்திகள் என்ன இருக்கப் போகிறது. இங்கே அனைத்தும் சீராக இடம் பெற்று நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், பத்திரிகைகளுக்கு சுவாரசியமான கொலை, கொள்ளை, தீ வைப்பு இது மாதிரியான செய்திகள் எதுவும் இங்கே இல்லை.

ஏற்கனவே இங்கே இருக்கிறவர்கள் அனைவரும் மரத்தடியிலே அமர்ந்திருந்து தியானம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரே செய்திதான் தினமும் இங்கே செய்தியாக வந்து கொண்டிருக்கிறது. அதைப்படிக்க இங்கே எவருமில்லை. ஆதலால் நீ நரகத்திற்குப் போ; அங்கேதான் எவ்வளவோ நடந்து கொண்டிருக்கிறது. அங்கே தான் அதிகளவான பத்திரிகையாளர்கள் தேவைப்படுகிறார்கள். அங்கே உனக்கு நிறைய வேலை இருக்கும்; மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும்'' என்றார்.

பத்திரிகையாளர் சற்று யோசனை செய்தார். இவருக்கு சொர்க்கத்திலேயே இருக்க வேண்டும் என்றுதான் ஆசை. அதனால் வாயிலில் நின்றவரின் அருகில் சென்று, ''ஐயா... என்னை ஒரு 24 மணி நேரம் இங்கே உள்ளே இருப்பதற்கு அனுமதி வழங்குங்கள். உள்ளே இருக்கும் பல பத்திரிகையாளர்களை எனக்குத் தெரியும். அவர்களில் சில பேரை சமாதானப்படுத்தி மெதுவாக நரகத்துக்கு அனுப்பி வைத்துவிட்டு, நான் இங்கேயே இருக்கிறேன். உங்கள் கணக்குப்படி 12 பேரைத்தாண்டாது'' என்றார்.

''சரி... என்று சொல்லிவிட்டு பத்திரிகையாளரை உள்ளே செல்ல அனுமதித்தார்.

உள்ளே சென்ற பத்திரிகையாளர் ஒரு பெரிய புரளியை சொர்க்கத்தில் கிளப்பி விட்டார்.

சக பத்திரிகையாளர்களையும் அழைத்து, நரகத்திலே ஒரு பெரிய தினசரி பத்திரிகையைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம். அதற்கு பல அதிகாரிகள் தேவையாகவுள்ளனர். கை நிறைய சம்பளம் கிடைக்கும். ஆசைப்படுபவர்கள் போகலாம்'' என்ற பெரிய புரளியை ஏற்படுத்தினார்.

24 மணி நேரம் சென்ற நிலையில், வாசல் பக்கம் போனார். பத்திரிகையாளர் அங்கே இருந்தவரிடம் ''எத்தனை பேர் வெளியேறினார்கள்?'' என்று விசாரித்தார்.

''நீ கூறிய செய்தியைக் கேட்டதும் சொர்க்கத்தில் இருந்த அனைத்தும் பத்திரிகையாளர்களும் நரகத்திற்கு போய் விட்டார்கள். உள்ளே யாரும் இல்லை. ஆதலால் நீ உள்ளே இருக்கலாம்'' என்றார்.

இதைக் கேட்டதும் இந்தப் பத்திரிகையாளர் குழம்பி விட்டார். ஒரு வேளை, நரகத்தில் புதிதாக பத்திரிகை ஏதேனும் ஆரம்பித்து விட்டார்களோ...?'' என்று நினைத்தார்.

''ஐயா என்னையும் நரகத்திற்கு விட்டு விடுங்கள். அங்கே ஏதோ விசேடம் இருக்கிறது. என்னைத் தடுக்காதீர்கள்'' என்று கெஞ்சினார்.

பிறரை ஏமாற்றிய அவரது மனம் கடைசியிலே அவரையே ஏமாற்ற ஆரம்பித்து விட்டது.

நீங்கள் இப்படி பிறரை ஏமாற்ற உங்கள் மனதை பழக்கப்படுத்துகிறீர்கள். ஆனால், கடைசியிலே அதனாலே நீங்களே ஏமாற்றப்படுகிறீர்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சுன்னாகம் ப.நோ.கூட்டுறவு சங்க பணியாளர்கள் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் 5 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் தொடக்கம் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தினை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

சங்கத்தின் நிர்வாகச் சீரின்மை காரணமாக பல இன்னல்களுக்கு மத்தியில் இதுவரை காலமும் பணியாற்றி வந்தோம். ஆனால், தற்போதைய வாழ்க்கை சூழ்நிலையில் எம்மால் கடமையாற்ற முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதனால் மிக நீண்ட காலமாக் (10 வருடங்களுக்கு மேலாக) நிரந்தர நியமனமின்றி கடமைபுரியும் பணியாளர்களின் ஆளணி அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல், மாதாந்தம் சம்பளம் அந்தந்த மாதம் (25 ஆம் திகதி வழங்கப்படுதல், கிளைகளுக்கு உரிய முறையில் விற்பனைக்கான பொருட்களை தடையின்றி வழங்குதல், அதிகரித்த சம்பளம் பெறுவதற்கான நடவடிக்கையினை நிர்வாகத்தினர் மேற்கொள்ளல், கார்த்திகை, மார்கழி மாத சம்பளம் உடன் வழங்கப்படுதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தினை மேற்கொண்டுள்ளோம்.

மேலும் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் நிர்வாகத்தினால் நிவர்த்தி செய்யப்படும் பட்சத்தில் எமது வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவை தொடர்பாக இயக்குநர் சபை தலைவர்; பொது முகாமையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோருக்கு எழுத்து மூலமாக அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே தாம் இவ்வேலை நிறுத்தத்தினை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (அ-9)

# வெளி மாவட்ட ஆசிரியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது

### *சொந்த வலயங்களில் கடமை புரியலாம்*

வெளிமாவட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சென்று கடமையை முடித்த ஆசிரியர்கள் இன்றிலிருந்து தமது சொந்த வலயங்களில் பணியாற்ற முடியும் என மாகாணக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார். இரு வருட ஒப்பந்த அடிப்படையில் யாழ்.மற்றும் வவுனியா தெற்கினைச் சேர்ந்த 70 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் உத்தரவின் பேரில் மாகாண கல்வி அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு 2010 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதியன்று இவ் ஒப்பந்த இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி இரு வருட ஒப்பந்தகாலம் நேற்றுடன் (2013.01.01) முடிவடைந்த நிலையில் அவ் ஆசிரியர்கள் தமது சொந்த வலயங்களுக்கு மீண்டும் பணியாற்ற முடியாதவாறு குறித்த இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்திருந்தது.

மாகாண கல்வியமைச்சினால் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிகள், நியமனக் கடிதங்கள் என்பன மாகாண கல்வி திணைக்களத்தின் இவ் அறிவிப்பால் பொய்யாக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மாகாண கல்விப்பணிப்பாளரினை நாடினர். எனினும் அங்கு உரிய பதில் தரப்படாமையினால் அவர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவினை நேற்று முன்தினம் நாடியிருந்தனர். அங்கு மாகாண கல்வித்திணைக்களத்திற்கு எதிராக முறைப்பாட்டினையும் பதிவு செய்திருந்தனர். இந்நிலையில் நேற்றைய தினம் மாகாண கல்விப் பணிப்பாளர் இருவருட ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய ஆசிரியர்கள் தமது சொந்த வலயங்களில் இன்று முதல் பணியாற்ற முடியும் என அறிவித்துள்ளார். அதற்கான நியமனக் கடிதங்களும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 110 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 110 | 300 | 150 |
| தக்காளி | 80 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 80 | 80 |
| கரட் | 80 | 140 | 140 |
| பூசணி | 30 | 60 | 40 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 180 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 160 | 120 | 100 |
| லீக்ஸ் | 90 | 140 | 140 |
| பீற்றூட் | 180 | 150 | 120 |
| கறிமிளகாய் | 220 | 200 | 200 |
| இராசவள்ளி | 150 | 170 | 180 |
| போஞ்சி | 80 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 120 | 140 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 |
| முருங்கைக்காய் | 600 | -- | -- |
| வெங்காயப்பூ | 240 | 80 | -- |

# இராசி பலன்

02.01.2013
(மார்கழி 18, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 8.17 மணிவரை
மகம் முற்பகல் 11.26 மணிவரை
இராகுகாலம் 12.30-2.00 மணிவரை
சுபநேரம் 5.00-6.30 மணிவரை
சித்தாமிர்தம்.

**மேடம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**இடபம்** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சகோதர ஒற்றுமை பலப்படும், தொழில் நன்மையுண்டு, நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும், திடீர் பயணங்கள் உருவாகலாம், கனவு பலிதமுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** ஊர் மாற்றம், இடமாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினரை அனுசரித்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்** அதிகாரத்துடன் செயற்படுவீர்கள், இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், திடீர் பண வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**தனுசு** சாதுரியமாகப் பேசி சாதனை படைப்பீர்கள், தடைப்பட்ட காரியங்கள் தானாக வந்து சேரும், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நாள், குடும்பத்தில் சில மனஸ்தாபங்கள் தோன்றி மறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கும்பம்** விட்டுச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன நன்மையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் நடைபெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் பௌசரும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மானிப்பாயிலிருந்து கைதடி நோக்கிச் சென்ற தென்பகுதியினைச் சேர்ந்த பெற்றோல் பௌசரும் நீர்வேலியிலிருந்து யாழ். நோக்கி வந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகியுள்ளது.


இவ் விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் வேளையில் கோப்பாய் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்து கால் முறிந்த நிலையில் நீர்வேலியினைச் சேர்ந்த ஞான சேகரம் பிரதீப்(வயது 21) என்ற இளைஞர் கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றைய ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளான நிலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் அங்கு பெரும் சனக்கூட்டம் கூடி பெற்றோல் பௌசரின் தென்பகுதி சாரதியினை தாக்குவதற்கு முயன்ற போதிலும் அது அங்கு நின்ற சிலரால் தடுக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக கோப்பாய் போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-4)




# வடமராட்சி கிழக்கிற்கு முழுமையான மின்சாரம் கிடைப்பது எப்போது?

## மக்கள் கேள்வி

(பொற்பதி)

யாழ். மாவட்டத்தின் வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்திற்கு எப்போது முழுமையாக மின்சாரம் கிடைக்குமென இப் பகுதி மக்கள் பெரும் அவாவுடன் இருப்பதாக இப்பகுதி புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களின் பின்னர் சென்ற வருடம் வடமராட்சிக் கிழக்கு பிரதேசம் நோக்கி பயணித்த மின்சாரத்தைக் கண்ட மக்கள் பெரும் ஆவல் அடைந்தனர். சில பிரத்தியேக தேவைகளின் நிமித்தம் துரிதமாக மின் கம்பங்கள் நிறுத்தப்பட்டு கேபிள்கள் பொருத்தப்பட்டு வந்தன. விரைவாகவே மருதங்கேணிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. அத்துடன் இந்தப் பகுதியின் மின் இணைப்பு வேலைகள் அனைத்தும் ஆமை வேகமாகவே ஆகி விட்டது.

மருதங்கேணி சந்திப்பகுதியில் உள்ள அரச மற்றும் தனியார் பொது அமைப்புக்கள் என குறிப்பிட்டு கூறக்கூடிய சில இடங்களுக்கு மட்டும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால், மருதங்கேணிக்கு கிழக்கில் உள்ள வத்திராயர் தொடக்கம் ஆழியவளை வரைக்கும் மருதங்கேணிக்கு மேற்காக உள்ள தாழையடி தொடக்கம் நாகர்கோயில் வரைக்கும் சில இடங்களில் மின்கம்பங்கள் இறக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் மின்கம்பங்கள் மேல் கேபிள்கள் பொருத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் படிமாற்றிகள் வைக்கப்பட்டும் உள்ளன. இவ்வாறே முற்று முழுதாக மின்சார வேலைகள் முடிவடையாத வண்ணமாகவே இக் கிராமங்கள் காணப்படுகின்றது.

இவற்றை விடவும் வெற்றிலைக்கேணி தொடக்கம் போக்கறுப்பு வரைக்குமான கிராமங்களுக்கு எவ்விதமான மின்சார வேலைகளும் ஆரம்பிக்கப்படவே இல்லை.

இப்பகுதி மக்கள் தமது கிராமங்களுக்கு வருகை தரும் அரச அதிகாரிகளையும் மற்றும் அரசியல் தலைவர்களையும் எமது மின்சாரத்தேவை எப்போது பூர்த்தி அடையும் எனக் கேட்டால் அவர்கள் சில மாதங்களில் பூர்த்தியாகும் என கூறுகின்றனர்.

மாதங்கள் வருடங்களாகியும் மின்சாரம் இந்த மக்களுக்கு கிடைக்கவில்லை. கால காலமாக யுத்தம், இயற்கை அழிவுகள் எனத் துன்பப்பட்ட இப் பிரதேச மக்களின் துயரைத் துடைத்து இந்த மக்களின் அனைத்து தேவைகளையும் விரைவாக நிறைவு செய்து இப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அனைத்துத் தரப்புகளும் முன்வர வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-64)

## வீட்டு தோட்டத்திற்கு 19 பயனாளிகள் தெரிவு

(சாவகச்சேரி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வீட்டுத் தோட்டத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் 49 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப் பயனாளிகள் வாழும் பிரதேச வளத்திற்கு ஏற்ப வீட்டுத் தோட்டங்கள் அமைப்பது தொடர்பான பயிற்சி வகுப்புகள் விவசாய போதனாசிரியர்களால் விரைவில் நடத்தப்படும் என பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) தெரிவித்துள்ளார். (அ-3-29)

# யாழ்.மாநகர சபை சோலைவரிப்பகுதி கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் சோலை வரியினை கணனி மயப்படுத்தும் நிகழ்வு நேற்று மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் பெறப்படும் சோலைவரியினை கணனி மயப்படுத்தி பொதுமக்களுக்கு இலகுவான முறையில் சோலை வரியை செலுத்துவதற்கு இதன்மூலம் வழிவகை செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இது வரை காலமும் சோலை வரியினை செலுத் துவதற்காக குறிப்பிட்டளவு நேரத்தினை பொதுமக்கள் செலவிட வேண்டியிருந்தது.

இக் கணனி மயப்படுத்தலினால் அந்நேரவிரயம் சீர் செய்யப்பட்டு ஒரு சில நிமிடங்களிலேயே சோலை வரியினை செலுத்துவதற்கு இதன் மூலம் முடியுமாகவுள்ளது.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா,

சோலைவரியினை முதன் முறையாக கணனி மயப்படுத்துவதில் நாம் பெருமையடைகின்றோம். இது எமது ஊழியர்களின் அயராத முயற்சியினால் ஏற்பட்ட பலன்களில் ஒன்றாகும் என்றார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய மாநகர சபை ஆணையாளர் பிரணவநாதன் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக நாம் பழைய திட்டத்திலான ஆதனவரி அளவீட்டு திட்டத்தினையே பயன்படுத்தி வந்துள்ளோம். அதன்படி கடந்த காலங்களில் 18 தொடக்கம் 25 வீத வரி அளவீட்டின் அடிப்படையிலேயே சோலைவரியினை அறவிட்டு வருகின்றோம்.

தற்போது வரி மதிப்பீட்டு திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆதன வரி மதிப்பீட்டின் படி ஆதனங்களின் பெறுமதி 10 மடங்கிற்கு மேலாக அதிகரித்து உள்ளதனால் (இன்று) நேற்றிலிருந்து 6 வீதமாக புதிய வரி மதிப்பீட்டின் படி குறைக்கப்பட்டுள்ளது.

இக்கணனிமயப்படுத்தல் எமது அதிகாரிகளின் ஒரு வருட கால அறுவடையே என அவர் தெரிவித்தார். கணனி மயப்படுத்தலுக்கு தொழில் நுட்ப ரீதியாக பக்கபலமாக இருந்து அதனை நெறிப்படுத்திய ஏசியா பவுண்டேசனின் யாழ்.இணைப்பாளர் சுதாகரன், ஈகை தொண்டு நிறுவனத்தின் அதிகாரிகள், யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், வர்த்தகரும் ஈகை கொடையாளருமாகிய ஈ.எஸ்.பி.நாகரட்ணம், வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததோடு இதன்போது முதலாவது ஆதனவரி செலுத்தும் வைபவமும் நடைபெற்றது. (அ-4)

## வேம்படி மகளிர் 10 ஆம் திகதி ஆரம்பம்

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் க.பொ.த.(சா/த) பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி இடம்பெறுவதனால் இன்று புதன்கிழமை முதலாம் தவணை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக பாடசாலை ஆரம்பிக்கப்படமாட்டாது எனவும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முதலாம் தவணைக்காகத் திறக்கப்படும் எனவும் பாடசாலை பிரதி அதிபர் அறிவித்துள்ளார். (அ-9)

## கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் கிளினிக்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்ட பெண்களுக்கான கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் தொடர்பான கிளினிக் பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

## வாழும் கலை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் வாழும் கலைப் பயிற்சிகளாகிய மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், யோகா, தியானம், சுதர்சன கிரியா ஆகியவற்றின் இலவச அறிமுக உரை இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

## யாழ்.செய்திகள்...

## வீரசிங்கம் ம.க. தனி அலகாகிறது

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவு தனி அலகாக இன்று தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை என்னும் பெயருடன் இயங்கவுள்ள இப் பாடசாலையின் அதிபராக கா.கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியில் கடமையாற்றிய 12 ஆசிரியர்களும் இவ் ஆரம்ப பிரிவில் கடமையாற்றவுள்ளனர். மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மத்திய கல்லூரியாக கல்வி அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷ்ணபுரத்தில் ஆரம்பப்பாடசாலை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிருஸ்ணபுரம் கிராமத்தில் இராம கிருஷ்ண வித்தியாலயம் எனும் பெயரில் ஆரம்ப பாடசாலை நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை ஆரம்பிப்பதற்கான அனுமதி வடமாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார். இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்கள் கல்வி கற்கவுள்ளனர். (அ-3-254)

# பாதிக்கப்பட்ட மக்களை கைவிடப் போவதில்லை

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

பாதிக்கப்பட்ட மக்களை கைவிடப் போவதில்லை என முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன் சேகா தெரிவித்துள்ளார்.

குருணாகல் பிரதேசத்தில் காலநிலை சீர்கேட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும்கூறுகையில் , எதிர்காலத்தில் தேவை ஏற்படும் சந்தர்ப் பங்களில் மக்களுக்காக குரல் கொடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். எந்தக் காலத்திலும் மக்களை மறக்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிவாரணங்களை வழங்கும் நிகழ்வானது அரசாங்கம் மக்களுக்கு இலஞ்சம் வழங்குவதனைப் போன்று கருதப்பட முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சத்தியசாயி நிலையத்தில் பாகவத படலம் வாசிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று புதன்கிழமை முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை பாகவத வாசிப்பும் பஜனைப் பாடல்களும் இடம்பெறவுள்ளதாக சத்திய சாயி சேவா நிலையம் அறிவித்துள்ளது. (அ-9)

# கஞ்சா வைத்திருந்த புத்தள வாசி கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவினை தன்வசம் வைத்திருந்த புத்தளத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவரினை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். நாவாந்துறைப் பகுதியில் 55 கிராம் 200 மில்லிகிராம் கஞ்சாவினை விற்பனை நோக்கில் வைத்திருந்த குற்றச்சாட்டில் புத்தளத்தினைச் சேர்ந்த முஸ்லிம் நபரொருவர் நேற்று முன்தினம் இரவு 6.30 மணியளவில் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இவர் நேற்றைய தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவருக்கு விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் புத்தளத்தினை சேர்ந்த நபர்களினால் தான் யாழிற்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா ஏற்கனவே தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)

# சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவித்த ஐந்து விடயங்கள்

### விக்கிலீக்ஸ் இணையம் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முனைப்புக்களின் ஐந்து விடயங்கள் சிங்கள கடும்போக்காளர்களை அதிருப்தி அடையச் செய்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நோர்வே தூதுவர் நாடு கடத்தப்பட வேண்டும். அண்மையில் ஐரோப்பாவில் திரையிடப்பட்ட தமிழர் ஆதரவு திரைப்படம் பி.பி.சீ. கருத்துக் கணிப்பில் தமிழ்த் தேசியப் பாடலுக்கு கௌரவமளிக்கப்பட்டமை, தேசிய கீதம், தேசியக்கொடி போன்ற விடயங்கள் தொடர்பில் சிங்கள கடும்போக்குடைய அரசியல் கட்சிகள் கூடுதல் கவனம் செலுத்தியதாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளனர்.

சிங்களக் கடும்போக்குடைய அரசியல் கட்சிகள் சமாதான முனைப்புக்களுக்கு எதிராக செயற்பட்ட போதிலும் அது பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளே இவ்வாறு கோரி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் மற்றும் பிரசித்த தூதுவர் லிவிஸ் அம்லீம் ஆகியோரே இந்த குறிப்பினை அனுப்பி வைத்துள்ளனர்.

சிங்களக் கடும் போக்குடைய கட்சிகளின் அழுத்தங்கள் பாரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை எனவும் அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டால் அது சமாதான முனைப்புக்களில் பாதக தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தெரிவுக்குழுவின் அறிக்கை நீதிமன்றின் கண்காணிப்புக்கு

### ஐ.நா.வுக்கு உறுதியளித்ததாக ஐ.தே.க. தெரிவிப்பு

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை நீதிமன்றின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படும் என ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க பிரதமராக ஆட்சி செய்த காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் இந்த உறுதி மொழி அளிக்கப்பட்டது.

குற்றப் பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகள் சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு முரணானது என்ற காரணத்தினால் இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடாத்தும் விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் வாக்குறுதி அளித்துள்ளது.

நீதிமன்றின் மேற்பார்வையின்றி குற்றப் பிரேரணைகளை முன்னெடுப்பதில்லை என அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வாகன விபத்தில் ஒருவர் காயம்

(குருமன்காடு)

சிறைச்சாலை வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சாரதி காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வவுனியா ஹொரவப் பொத்தான வீதியில் உள்ள உமா மகேஸ்வரன் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நீதிமன்றத்தில் விசாரணைகள் முடிந்த பின் கைதிகளை ஏற்றிக்கொண்டு கெப்பட்டி கொலாவ நோக்கி சென்ற சிறைச்சாலை வாகனம் உமாமகேஸ்வரன் சந்தியிலிருந்து கோவில்குளம் நோக்கி திரும்பிய மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் சாரதி பொ. சுப்பிரமணியம் (வயுது 68) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் வாகன சில்லுக்குள் அகப்பட்ட போதும் சாரதி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ- 250)


**Vacancies**

எமது நெல்லியடி கிளையில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Course Counselor | - Female |
| Customer Relation Officer | - Female |
| Computer Instuctor | - Male / Female |
| Assist. Lecturer for Java,Tally | - Male / Female |
| Hardware Technician | - Male |

தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

ASIAN COMPUTER EDUCATION
Kodikamam Road,Nelliyadi.
e-mail : asianedu@dialogsl.net
(தி/1987)

**Vacancies**

எமது சாவகச்சேரி கிளையில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Course Counselor | - Female |
| Customer Relation Officer | - Female |
| Computer Instuctor | - Male / Female |
| Assist. Lecturer for Java,Tally | - Male / Female |
| Hardware Technician | - Male |

தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

ASIAN COMPUTER EDUCATION
Kaddukkani Lane, Chavakachcheri
e-mail : asianedu@dialogsl.net
(அ/1987)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்:6'1''<br>கி.பா: 16, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: CCNA IT Support (UK PR) Computerized Security system<br>தொ. இல: B -887 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>உயரம்: 5'2''<br>கி.பா: 28.75, 2இல் செவ்.<br>தொழில்/ தகைமை: Lecturer மலேசியா Phd கற்கை நெறி (3 வருடம்)<br>தொ. இல: G -906 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம்: 5'6''<br>கி.பா: 47.25, 7 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: ரெலிக்கொம்<br>தொ. இல: B -889 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்: 5'6''<br>கி.பா: 61, 1 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: HNDA, NCAT முகாமைத்துவ உதவியாளர்<br>தொ. இல: G -908 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 5'8''<br>கி.பா: 35.25, 12 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: Management Diploma Manager (தனியார்)<br>தொ. இல: B -890 | பிறப்பு: 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'4''<br>கி.பா: 34.25, 7 இல் செவ்.<br>எ.பா: BSc, Science ( ஆசிரியை)<br>தொ. இல: G -909 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'9''<br>கி.பா:12.5<br>தொழில்/ தகைமை: O/L சாரதி<br>தொ. இல: B -891 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>உயரம்: 5'<br>கி.பா: 46<br>தொழில்/ தகைமை: O/L<br>தொ. இல: G -910 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரதீவு பெத்தப்பர் ஆலய வீதியை புனரமைப்புச் செய்ய இணக்கம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஊரதீவு பெத்தப்பர் ஆலய வீதியை புனரமைத்துத் தருவதற்கும் கேரதீவு இந்து மயானத்தில் இளைப்பாறு மண்டபம் ஒன்றை அமைப்பதற்கும் வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தவிசாளரைச் சந்தித்து முன்வைத்த வேண்டுகோளையடுத்தே இணக்கம் அவரால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இவ்வாண்டுக்கான நிதியொதுக்கீட்டில் அவற்றை விரைவாக செய்து தருவதாக அவர் உறுதியளித்தார்.

மேலும் இது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு பொறுப்பதிகாரி கு.விஜயகுமாருக்கு அவர் பணித்துள்ளார்.

இது தொடர்பில் ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வேலணை பிரதேச சபை தவிசாளரிடம் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

புங்குடுதீவு ஊரதீவு பாணாவிடைச் சிவன் ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியாகக் காணப்படும் பெத்தப்பர் வீதி சுமார் 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் சிதைவடைந்துள்ளது.

அதிகமான மக்கள் வாழும் குடியிருப்பாக காணப்படும் இவ்வீதியூடாகவே ஊரதீவு பாணாவிடைச் சிவன் ஆலயத்துக்கு வாகனங்கள் பயணிக்க முடியும்.

ஆனால், தற்போது அப்பாதையூடாக போக்குவரத்துச் செய்வதென்பது கல்லில் நார் உரிக்கும் கதையாகவே உள்ளது. மிகவும் சிரமப்பட்டு மணற் பாதையில் வாகனங்கள் புதையும் நிலையிலேயே அப்பாதையூடான போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தாங்கள் வேலணை பிரதேச சபைத் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் தங்கள் பிரிவுக்குட்பட்ட குச்சொழுங்கைகள் முதல் பிரதான வீதிகள் வரை அனைத்தையுமே புனரமைப்பு செய்து வருகிறீர்கள். ஆனால், ஊரதீவுக் கிராமத்தில் மட்டும் பல வீதிகள் இன்னும் புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றன. இதனை தாங்களும் அறிந்திருப்பீர்கள் என நம்புகின்றோம்.

எனவே, பெத்தப்பர் வீதியை பாணாவிடைச் சிவன்கோவில் வரை தார் வீதியாக மாற்றி பக்தர்களும் மக்களும் இலகுவாக பயணம் செய்ய வழி செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாணாவிடைச் சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இடம்பெறுவதற்கு முன்னதாக இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் ஊரதீவு மக்களின் பாவனையிலுள்ள ஒரேயொரு இந்து மயானம் கேரதீவில் அமைந்துள்ளது. ஊரதீவு பகுதியிலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்திலேயே இம்மயானம் அமைந்துள்ளது. ஊரதீவிலிருந்து இறுதிக் கிரியை நிகழ்வுகளுக்குச் செல்பவர்கள் அங்கு கடமைகளை நிறைவு செய்யும் வரை இளைப்பாறுவதற்கு ஏதுவான இடங்கள் எவையும் அங்கு இல்லை.

இக்குறை நீண்ட காலமாகவே காணப்பட்டு வருகின்றது . எனினும் இது குறித்து எவரும் அக்கறை கொள்ளவில்லை. எனவே, தயவு செய்து நீங்கள் இதில் கூடிய கவனம் எடுத்து ஊரதீவு இந்து மயானத்தில் ஓர் இளைப்பாறும் மண்டபம் ஒன்றினை அமைத்து தருவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம் என அவர்கள் அதில் குறிப்பிட்டுள்ளனர். இதனையடுத்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## இவ்வாண்டுக்கான சிறந்த சுற்றுலாத்தளம் இலங்கை

2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த சுற்றுலாத்தளமாக இலங்கை காணப்படுவதாக பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனமானது தெரிவு செய்துள்ளது.

இலங்கையில் இயற்கை அழகுகள் மிகுந்த இடங்கள், வரலாற்று தளங்கள், மற்றும் விருந்தோம்பலுக்கு ஏற்ற விதமான இடங்கள் போன்றவற்றை கருத்திற்கொண்டே இலங்கைக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை சுற்றுலாத் துறையானது எதிர்வரும் 2016 ஆம் ஆண்டிற்குள் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ப.தெ.கூட்டுறவு சங்கத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் தனது கல்வி அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் இருந்து சங்கத் தின் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

சங்க அபிவிருத்தி நிதியில் இருந்து வருடாவருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)



வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மக்கள் வங்கியின் இந்து சமய சங்கத்தினால் நிவாரணப் பொருட்கள் நாடு பூராகவும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் ஒருகட்டமாக வவுனியா மதகுவைத்த குளப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் வன்னி உதவி பிராந்திய முகாமையாளர் ஆர்.ரவிகரன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

# ஐ.நா. மனித உரிமை பேரவையில் சாட்சியமளிக்க ஷிராணி தயார்?

## எதிர்வு கூறுகிறார் அமைச்சர் விமல்

இலவசக் கல்வியின் உதவியினால் கல்வி கற்ற சிலர் நாட்டுக்கு எதிரியாக மாறியுள்ளதாக வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க இலவசக் கல்வியின் மூலம் கல்வி பயின்றவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசர் சாதாரண குடும்பத்தில் பிறந்து சாதாரண பாடசாலைகளில் கல்வி பயின்று கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்தவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் உதவியினால் பிரதம நீதியரசருக்கு கலாநிதி பட்டம் கிடைக்கப் பெற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் நிலைமையில் கல்வி பயின்று முன்னேற்றமடைந்த பிரதம நீதியரசர் நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதம நீதியரசர் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை அம்பலமாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நடைபெறவுள்ள அமர்வுகளில் பிரதம நீதியரசர் சாட்சியமளிக்கத் தயாராகி வருவதாகவும் இது பிரதம நீதியரசருக்கு ஏற்புடையதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# துணுக்காய் க.வ. கடமையாற்ற 106 ஆசிரியர்கள் இன்னும் தேவை

## துணுக்காய் கல்விப் பணிப்பாளர் தகவல்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 60 பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் மாணவர்களின் கல்வி மட்டம் வீழ்ச்சியடையும் நிலைமை தோன்றியுள்ளதாகவும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குறித்த வலயத்தில் 60 பாடசாலைகளில் 106 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதன்படி ஆரம்பக்கல்வி பிரிவிற்கு 24 ஆசிரியர்களும் இடைநிலை கல்விப் பிரிவில் ஆங்கிலத்திற்கு 59 ஆசிரியர்களும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களிற்கு 23 ஆசிரியர்களுமாக 106 ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது.

இதைவிட இரண்டு வருட ஒப்பந்த கடமையில் வந்த 42 ஆசிரியர்கள் இவ்வருடம் (2013) இடமாற்றம் பெறுகின்றனர்.

இதேவேளை, வருடாந்த இடமாற்றத்தினால் 50 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இதன்காரணமாக ஒட்டுமொத்தமாக 200இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடம் காணப்படுகின்றது.

இதன் காரணமாக மாணவர்களின் கல்வியே மேலும் வீழ்ச்சியடைகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் க.பொ.த.உயர்தர பாடங்களின் சில பிரிவுகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றபோதும் தற்போதுள்ள ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இக்குறைபாடு சற்று நிவர்த்தி செய்யப்படுகின்றது.

குறித்த ஆசிரியர் பற்றாக்குறை குறித்து வடமாகாண கல்விப் பணிப்பாளர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வட மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-15)

# இலங்கை கடற்பரப்பில் மீன்பிடி உரிமை வேண்டும்

## புதுவை மீனவர்கள்

புதுவை மீனவர்கள் நலன் கருதி இலங்கை கடற்பரப்பில் குறிப்பிட்ட காலம் மீன் பிடித்துக் கொள்ள உரிமையை மத்திய அரசு பெற்றுத் தர வேண்டும் எனக் கோரி காரைக்கால் மாவட்ட மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டம் காரைக்காலில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதன்மூலம் காரைக்கால் துறைமுகத்திலிருந்து சுமார் 400 விசைப்படகுகள் தொழிலில் ஈடுபடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்ட அனைத்து மீனவ கிராமப் பஞ்சாயத்தாரர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இம் முடிவு குறித்து மாவட்ட காங்கிரஸ் கட்சியின் மீனவரணித் தலைவர் ரவி என்கிற நடராஜன் கூறுகையில்,

சுனாமிக்குப் பின்னர் தமிழக கடல் பகுதியில் மீன் வளம் குன்றிவிட்டது. ஆனால், இலங்கை கடல் பரப்பில் ஆண்டில் குறிப்பிட்ட மாதம் மீன் அதிகமாக கிடைக்கிறது. தமிழக மீனவர்களுக்கு தொழில் மந்தம் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் குறிப்பிட்ட காலம் மீன்பிடித்துக் கொள்ள உரிமையை மத்திய அரசு பெற்றுத்தர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அழுகிய உருளைக்கிழங்குகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தம்புள்ளையில் 20 ஆயிரம் அழுகிய உருளைக்கிழங்குகளும் புறக்கோட்டையிலுள்ள விற்பனை நிலையமொன்றிலிருந்து 15 ஆயிரம் உருளைக்கிழங்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் விவகார அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையைத் தொடர்ந்தே இந்த உருளைக்கிழங்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, புறக்கோட்டையில் பழுதடைந்த 200 கிலோகிராம் கருவாடுகளையும் நுகர்வோர் விவகார அதிகார சபையினர் கண்டு பிடித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாண பெண்கள் குறித்து கவனம் செலுத்துங்கள்

## மிச்சலிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பெண்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அமெரிக்க முதல் பெண்மணியான மிச்சல் ஒபாமாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பராக் ஒபாமாவிற்கான தமிழர் அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழ் பெண்கள் பாதிக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு தமிழ் பெண்களின் நிலைமை குறித்து மிச்சல் ஒபாமாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் பெண்களில் பலர் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யுத்தத்தின்போது கணவரை இழந்த பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் குடும்பத் தலைமைப் பொறுப்பை வகித்து வருவதாகவும், வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழ் பெண்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# பொ.சு.பரிசோதகர்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுச்சுகாதார பரிசோதகர் பற்றாக்குறை நிலவுவதால் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதில் கரைதுறைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தேவைப்படுகின்ற நிலையில் 3 பேரே தற்போது கடமையாற்றுகின்றனர்.

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவில் 4 பேர் சேவையாற்ற வேண்டிய நிலையில் 2 பேரே சேவையாற்றுகின்றனர்.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேர் தேவைப்படுகின்றபோது இரண்டு பேரே கடமையாற்றுகின்றனர்.

மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர் தேவைப்படுகின்றபோது ஒருவரே கடமையாற்றுகின்றார்.

துணுக்காய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர் தேவைப்படுகின்றபோது ஒருவரே கடமையாற்றுகின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தமாக 22 பொது சுகாதார பரிசோதகர்கள் தேவைப்படுகின்றபோது 11 பேரே கடமையாற்றுகின்றனர்.

அதிலும் கரைதுறைப்பற்று, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர் உண்டு. அவர்களும் பதில் கடமை புரிபவர்கள். நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர்கள் இல்லை.

அதேபோன்று துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மட்டுமே பொது சுகாதார பரிசோதகர்களுக்கான தங்குமிடவசதி உண்டு. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இல்லை.

எனவே உரிய தரப்பினர் இப்பற்றாக்குறைகளை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# கைதான 100 சீன நாட்டவர்களை விசாரிக்க சீன பொலிஸார் வருகை

(கொழும்பு)

இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள 100இற்கும் மேற்பட்ட சீனப் பிரஜைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அந்நாட்டு குற்றத்தடுப்புப் பொலிஸ் குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள சீனப் பிரஜைகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கும் வகையிலேயே இக்குழு இலங்கை வந்துள்ளது.

இலங்கையைத் தளமாக வைத்து இணைய வலையமைப்பின் ஊடாகக் கோடிக் கணக்கான ரூபாய்களை மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சீனர்களில் சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ள சிலரும் காணப்படுகின்றனர். இவர்களை விசாரணை செய்யவே சீனாவின் குற்றத்தடுப்புப் பொலிஸ் குழு இங்கு வந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள சீனப் பிரஜைகளை அந்நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக இவர்கள் இலங்கை வந்துள்ளனர்.

இதேவேளை, இணையத்தின் ஊடாக மோசடிகளில் ஈடுபட்ட 100 சீனர்களை நாடு கடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இணையத்தின் ஊடாக மோசடிகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து 100 சீனர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர். இந்த சீனர்கள் நீதிமன்றின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் இலங்கையில் நடத்தப்பட வேண்டிய விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாக சீனப் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்து சீனர்களை நாடு கடத்துமாறு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டுள்ளார்.

இணையத்தின் ஊடாக சீன வங்கிக் கணக்குகளில் மோசடி செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)

# பாவனைக்கு உதவாத வெங்காயம்; விசாரணை செய்ய குழு அமைப்பு

இலங்கை சதொச களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத பெரிய வெங்காயம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு நாடு முழுவதிலுமுள்ள சதொச விற்பனை நிலையங்களிற்குச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆலோசனையின்படி அமைக்கப்பட்ட மூவர் அடங்கிய இக்குழு இன்று முதல் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த குழு நாடு முழுவதிலுமுள்ள சதொச விற்பனை நிலையங்களிற்குச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

கடந்த 29ஆம் திகதி நுகர்வோர் அதிகார சபை இலங்கை சதொச விற்பனை நிறுவனங்களில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது பாவனைக்கு உதவாத 44 ஆயிரத்து 700 கிலோகிராம் பெரிய வெங்காயத்தை கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



கரவெட்டி கோவிற்கடவை சித்தி விநாயகர் முன்பள்ளியில் கலை விழாவும் சிரேஷ்ட மாணவர் கௌரவிப்பும் அண்மையில் கோவிற்கடவை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறார்களின் பாண்ட் அணிவகுப்பையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராச்சி கல்வி வலயக் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.விஜயலட்சுமி சுகுமாறன் சிறாரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறார்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

# சட்டவிரோதமாக நுழைந்த ஏழு பேருக்கு பிணை

(மன்னார்)

தலைமன்னார் வழியாக சட்டவிரோதமான முறையில் இலங்கையினுள் நுழைந்த 7 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸாரினால் இவர்கள் ஏழு பேரும் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண்கள் இருவரும் அடங்குகின்றனர்.

இவர்கள் கடந்த காலங்களில் இலங்கையிலிருந்து சென்று இந்தியாவிலுள்ள முகாம்களில் வசித்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# செங்கல்பட்டு அகதிமுகாமில் பதினாறு பேர் உண்ணாவிரதம்

செங்கல்பட்டு அகதிகள் முகாமில் உள்ள 7 பேர் தங்களை திறந்த வெளி முகாமுக்கு மாற்றக்கோரி கடந்த 23ஆம் திகதி முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் 6 பேரின் உடல்நிலை மோசமானது. இதையடுத்து அவர்கள் செங்கல்பட்டு அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதிகாரிகளின் சமரசத்தை ஏற்காமல் தொடர்ந்து அங்கும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இதற்கிடையே முகாமில் இருந்த மேலும் 5 பேர் தங்களையும் திறந்த வெளி முகாமுக்கு மாற்றக் கோரி உண்ணாவிரதத்தை தொடங்கினர்.

இந்த நிலையில் உண்ணாவிரதம் இருந்த நால்வரின் உடல்நிலை நேற்று முன்தினம் மாலை சோர்வடைந்தது.

இவர்களில் 3 பேரை செங்கல்பட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கும் சாப்பிட மறுத்து போராட்டத்தை தொடங்கி வருகிறார்கள்.

இந்நிலையில் நேற்று காலை மேலும் நான்கு பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அகதிகளின் போராட்டம் வலுவடைந்துள்ளது. இதுவரை மொத்தம் 16 பேர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். 9 பேர் வைத்தியசாலையிலும் 7 பேர் முகாமிலும் உள்ளனர். (அ-2)

# போலி நாணயத்துடன் நால்வர் கைதாகினர்

(கொழும்பு)

போலி நாணயத்தாள்கள் சிலவற்றுடன் திரிப்பனே பகுதியில் நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து நான்கு இலட்சத்து 8 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 78, ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 18 இவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் போலி இரத்தினக்கல் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 புத்தாண்டு பலன்கள்

## கற்பனைக்கு எட்டாத அளவு முன்னேற்றம் வந்துசேரும்





## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**சுகங்களும் சந்தோசங்களும் கூடும்! மற்றவர்கள் உங்களை தூக்கிப் பேசினாலும், தாக்கிப் பேசினாலும் ஒரே மனநிலையைப் பெற்றிருக்கும் மேட இராசி நேயர்களே!**



வந்துவிட்டது புத்தாண்டு! உங்கள் எண்ணம் ஈடேறும் விதத்தில் சந்திரபலத்தோடு வருடம் பிறக்கிறது. பிறக்கும் போதே உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெறுகிறார். அப்புறம் என்ன உங்கள் காட்டில் மழை தான். உள்ளத்தில் நினைத்ததையெல்லாம் உடனுக்குடன் முடித்துக் காட்டப்போகிறீர்கள். வெல்லம்போல பேசி உங்கள் மனதிற்கு வேதனையைக் கொடுத்தவர்களெல்லாம் இனி விலகிச் செல்லப்போகிறார்கள்.

தனாதிபதியாக அள்ளிக்கொடுக்கும் சுக்கிரன் விளங்குவதால் பணப்புழக்கம் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். மனப்பயம் வரும்போது மட்டும் மற்றவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். மற்ற நேரங்களிலெல்லாம் பயத்தை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டீர்கள்.

இந்தப் புத்தாண்டில் நீங்கள் மனதில் பதித்து வைத்துக்கொண்டு மறக்காமல் முன்னெச்சரிக்கையோடு செயற்படவேண்டிய நேரம், 02.03.2013முதல் 21.05.2013 வரை. அந்தநேரத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், சனியைப் பார்க்கிறார். அதன் பிறகும்கூட கடகத்தில் நீச்சம் பெறும்போதும் 20.08 2013 முதல் 08.10.2013 வரை செவ்வாய் சனியின் பார்வை இருக்கிறது. இந்தநேரத்தில் எதையும் யோசித்தும், இறைவனைப் பூஜித்தும் இறைவனுக்குரிய துதிப் பாடல்களை வாசித்தும் அருகில் உள்ளவர்களை நேசித்தும் நடந்து கொண்டால் ஆசைகளும் அரங்கேறும்; அமைதியும் கிடைக்கும்.

உங்கள் சுயஜாதகத்தில உள்ள கட்டங்களையும் புத்தாண்டிலுள்ள கிரகநிலைகளின் கட்டங்களையும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். வருடப்பிறப்பு நாள், பெரிய கிரகங்களின் மாற்றங்கள் உருவாகும் நாள் ஆகிய நிகழ்வுகளின்போது நமது தெசாபுத்தியும் இணைந்து செயற்பட்டால், இமயத்தின் எல்லைக்கு நாம் செல்லலாம்.

**சிவல்புரி சிங்காரம்**

சமய சந்தர்ப்பங்களெல்லாம் நமது வீட்டு வாயிலை நோக்கி வந்து கொண்டேயிருக்கும். கிரகங்களின் ஆதிக்கம் நன்றாக இருந்தால் துணிந்து எந்தக் காரியங்களையும் செய்யலாம். இல்லையேல் பணிந்து, வணங்கி பரிகாரங்களைச் செய்யவேண்டும்.

2013 ஆம் ஆண்டு சுக்கிரனுக்குரிய ஆண்டாக 6எண் ஆதிக்கத்தில் அமைவதால் சுக்ரபலம் உங்கள் சுயஜாதகத்தில் எப்படி இருக்கிறது என்பதை சரிபார்த்துக் கொள்வது நல்லது. இராசிநாதன் செவ்வாய் ஆண்டிற்குரிய சுக்கிரன் இரண்டின் அடிப் படையிலும் உங்கள் தொழில் நிலையத்தின் பெயரை நீங்கள் அமைத்துக் கொண்டால் பணமழையில் நனையலாம்.

**01.01.2013முதல் 27.05.2013 வரை**

வருடத் தொடக்கத்தில் குரு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் இராசிக்கு 6,8,10 ஆகிய இடங்ககளில் பதிகிறது. எனவே விதியை மாற்றும் ஆற்றல் வியாழனின் பார்வைக்கு உண்டு. எதிர்ப்பு , வியாதி, கடன், வழக்கு, உடல் நிலை, இடம், தொழில் மாற்றங்கள் போன்ற அனைத்திலும் மனதிற்குப் பிடித்தவிதத்தில் மாற்றங்கள் வரும் விதத்தில் கிரகநிலைகளின் சஞ்சாரம் இருக்கிறது.

வருடத் தொடக்கத்தில் சுகஸ்தானத்தில் சந்திரன் சஞ்சரித்து வருடம் தொடங்குகிறது. எனவே, சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் ஆண்டாக இதைக் கருதலாம். இராசிநாதன் செவ்வாய் உச்சம்பெற்று 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அதைக் குருவும் பார்க்கிறார். எனவே சகோதர வழியில் ஒத்துழைப்பு அதிகமாகவே இருக்கும். உங்களுடன் ஒட்டி உறவாடி ஆதரவாக இருப்பர். எதையோ மனதில் நினைத்துக் கொண்டு இதுவரை விலகியிருந்த உடன்பிறப்புகள் அதன் உண்மை நிலையை புரிந்துகொண்டு உங்களோடு விரும்பி வந்து சேருவர்.

தொழில் முன்னேற்றம் கருதி நீங்கள் எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றிபெறும். காரணம் 10இல் உச்சம்பெற்ற செவ்வாயை குரு பார்க்கிறார். குரு– மங்கள யோகத்தோடு தொழில் ஸ்தானம் பலம்பெறுவதால் உங்கள் தொழில் நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விவாகங்கள் நடைபெறலாம். அதை நீங்கள் முன்னின்று நடத்திவைக்கலாம். பதவி உயர்வை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு எதிர்பார்த்தபடியே வந்து சேரும். 10 இற்குரிய சனி உச்சம்பெற்று 7 இல் சஞ்சரிப்பதால், கணவன் வேலைக்குப்போகவில்லையே என்று கவலைப்படும் மனைவிக்கும், மனைவி வேலைக்குப் போகவில்லையே, வருமானத்தை தேடித்தரவில்லையே என்று கவலைப்படும் கணவன்மார்களுக்கும் புதிய தொழில்வாய்புகளும் அந்நியதேச யோகங்களும் வந்துசேரும்.

இராகுகேதுக்களின் ஆதிக்கம்தான் உங்களுக்கு அதிகமாக இருக்கிறது. ஜென்மத்தில் கேது இருந்தால் கவனமாக செயற்படவேண்டும் என்று சொல்வார்கள். மற்றவர்களை நம்பிச் செய்யும் காரியங்களில் முழுக்கவனமும் நீங்கள் செலுத்துவது நல்லது. இல்லையேல் ஆதாயம் ஏட்டில் எழுதிவைத்திருக்கலாம், ஆனால், உங்கள் எதிரில் வந்துநிற்காது. சர்ப்பசாந்திகள் உங்களுக்கு அனுகூலம் தரும். நாக ஸ்தலத்தில் முறையாக நீங்கள் யோக பலம்பெற்ற நாளில் செய்து கொண்டால் கற்பனைக்கு எட்டாத அளவு முன்னேற்றம் வந்துசேரும்.

**28.05 2013 முதல் 31.12.2013 வரை**

குரு மிதுனத்தில் சஞ்சரிக்கும் நேரமிது, குரு பார்வைபடும் இடமெல்லாம் பொன் கொழிக்கும் இடமாக மாறும். அந்த அடிப் படையில் 7,9,11 ஆகிய இடங்களில் குருவின் பார்வை பதிகிறது. தொட்டதெல்லாம் துலங்கும். தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர். வெற்றி பெற்றவர்களின் பட்டியலில் உங்களது பெயரும் இடம்பெறப்போகிறது. வினோதமான காரியங்கள் பல செய்து உங்கள் பெயரை நிலைநாட்டிக் கொள்வீர்கள்.

தந்தைவழிச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். தானாகவே பாகப்பிரிவினை செய்துகொள்ள சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவர். வெளிநாட்டுத் தொடர்பு விருத்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். நல்ல திருப்பங்கள் உருவாகும். மறுப்பு சொல்லியவர்களெல்லாம் மனம்மாறி உங்களுக்கு ஒத்துவருவர். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்துசேரும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். திருமண வயதடைந்தும் தேடிவைத்த பொருளில் தங்கத்தை இதுவரை வாங்கவில்லையே என்ற ஏக்கம் தீரும்.

பொருள் வளம் பெருகும். பொதுநலத்தில் ஈடுபட்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். நண்பர்களின் ஒத்துழைப்போடு நாணயப் பாதிப்பு இல்லாத வாழ்க்கையை நடத்தப் போகிறீர்கள்.

**குருவின் வக்ர காலம்!**

குரு, உங்கள் இராசியை பொறுத்தவரை 9,12 இற்கு அதிபதியாகிறார். அது வக்ரம் பெறும்பொழுது நன்மைகளையே உங்களுக்குச் செய்வார். விரயாதிபதி வகரம் பெற்றால் செலவுக்கேற்ற பணம் வந்துகொண்டேயிருக்கும். வீட்டிற்கு தேவையான மின் சாதனப் பொருட்களையும், கட்டில், பீரோ, கம்யூற்றர், மிக்சி, கிரைண்டர் என்று விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புகள் கிடைக்கும்.

தந்தைவழி உறவில் பகை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. பங்காளிப் பகையால் ஒருசில காரியங்களில் தடையேற்படலாம். குருவிற்குரிய ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து வழிபாடு செய்வதன்மூலம் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும்.

**சனி–செவ்வாய் பார்க்கும் காலம்!**

எந்தக் கிரகத்தை, எந்தக் கிரகம் பார்த்தால் நல்லது என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. இரண்டு பகைக் கிரகங்களின் பார்வை ஏற்படும்போது மோதல்களும் முன்னேற்றத் தடைகளும்தான் ஏற்படும். அதிலும் உங்கள் இராசிநாதன் செவ்வாய் ஒரு கிரகமாக பங்கு பெறுவதால்தான் அதன் பார்வை காலத்தில், பக்கபலமாக இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதும் பணம் கொடுக்கல்– வாங்கல்களில் கவனத்துடன் செயற்படுவதும், பிறரை விமர்சிப்பதை தவர்ப்பதும், பிரச்சினைகள் உருவாகாமல் நடந்து கொள்வதும் உங்கள் கையில்தான் இருக்கிறது.

விதியை வெல்ல யாராலும் முடியாது என்றாலும், நமது மதியால் ஓரளவாவது அதன் கடுமையைக் குறைத்துக்கொள்ள இயலும். சனியின் வக்ரகாலத்தில் தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். ஒப்பந்தங்களில் யோசித்துக் கையெழுத்திடுவது நல்லது.

மேட இராசியில் பிறந்த உங்களுக்கு வருடத்தொடக்கம் வசந்தமாக அமையும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். தாய் வழி ஆதரவு பெருகும். பெற்றோர் வழியில் வரவு உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொண்டு, உங்கள் பணிக்கு ஒத்துழைப்பாக இருப்பார்கள். கணவன்– மனைவிக்குள் கனிவுகூடும். பாசம்பொங்கும். பங்குதாரர்களாக இருவரும் இருந்து தொழில் நிலையத்தை இயக்கும் சூழ்நிலை உருவாகும். பிரபலமானவர்களின் ஒத்துழைப்போடு இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

குருப்பெயர்ச்சியும் சாதகமாக இருக்கிறது. பொதுவாக ஜென்மதத்தில் கேது, 7இல் இராகு, அமர்ந்து சர்ப்பதோசத்தை உருவாக்குவதால், யோகபலம்பெற்ற நாளில் ஜாதக ரீதியாக அனுகூலம் பெற்ற தெசாபுத்தியில் சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வது நல்லது. சனி– செவ்வாய் பார்வை காலத்தில் செலவுகள் கூடலாம். விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. அன்புடன் நடந்து கொள்வதன் மூலம் ஆதரவு கூடும்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு**

கேட்டவரங்களையெல்லாம் அள்ளிக் கொடுக்கும். தெய்வீங்களைப் பாட்டுப்பாடி, மலர்மாலை சூட்டி வழிபாடு செய்தால் ஆற்றல் கூடிவரும். ஆசைகள் நிறைவேறும். பொதுவாக செவ்வாய்க் கிழமைதோறும் முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

உங்கள் பிறந்த திகதி மற்றும் கூட்டுத் தொகைக்குரிய எண்களின் ஆதிக்கம் பார்த்து அதற்குரிய தெய்வங்களையும் தேர்ந்தெடுத்து வழிபாடு செய்தால் ஆச்சரியப்படத்தக்க வாழ்க்கை அமையும்.

குருவக்ர காலத்தில் குரு வழிபாடும், சனி செவ்வாய் பார்வைக் காலத்தில் அனுமன், துர்க்கை வழிபாட்டையும் வார வழிபாடாக மேற்கொள்வது நல்லது.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

02



அன்றொரு நாள்...

அதிகாலை அழகை வழிபட வந்தவள் கடற்கரையிலேயே உறைந்து போனாள் கற்சிலையாக.

நேற்றுப் பார்த்த மணல் வெளியா இது? நிறம் மாறி இருந்தது. காற்றின் பாடலுக்கு நடனமாடிய நாணற்புதரா அது...? தரையோடு தரையாய்க் கிடந்தது. வெள்ளி மணல் வெளியெங்கும் தாறுமாறாய்த் தார் ஊற்றியது போல் ஒரு கரும்படலம்.

இதுஎன்ன இயற்கைக்குப் புறம்பாய்...? இது மெக்சிக்கோ வளைகுடாதானா? லூய்சியானா கடற்கரைதானா? இடம்மாறி வந்து விட்டேனா? தலை சுற்றியது அவளுக்கு.

கடலோசையில் கேட்டது ஓர் அவலத்தின் சுரம்; நிமிர்ந்து நின்றவள் திடுக்கிட்டாள். அலையின் நிறம் வெள்ளை அல்லவா? பிறகு ஏன் இருளின் திரவ வடிவாய் அலை பொங்கி அடிக்கிறது கருங்கருப்பாய்?

பயந்து நடந்தாள்; காலணிகள் தாண்டி கால்களில் ஏறியது ஏதோ பிசுக்கு. ஒருகால் ஊன்றி மறுகால் உதறினாள் எமிலி. காலணி களன்றதன்றி கறுப்புச்சாயம் போகவில்லை.

அண்ணாந்து பார்த்தாள். காலைப் பறவை ஏதும் காணவில்லை வானத்தில். இன்னும் தரையிறங்கவில்லை வெளிச்சத்தின் விழுதுகள். தூரக் கடலில் தொடுவானத்தில் செம்பிழம்பு தெரிந்தது. கடல் எரியுமா? எரிகிறதே...

கடல்பரப்பில் சிவந்து எழுந்து நின்றது தீத்தூண் ஒன்று. அதை மண்டிநின்றது புகை மண்டலம். எரிமலை வெடித்திருக்குமோ கடலுக்குள்...?

அவள் உடல் நடுங்கியது. தங்கச் சாயம் இட்ட பட்டுநூல் கற்றைகளாய் அவள் வெள்ளிக் கழுத்தில் பொன் முடிகள் படபடத்தன; காற்றில் ஆடியது காதுவளையம்.


வெளிச்சம் பரவிப்பரவி தூரத்து இருளைத் துடைத்துக்கொண்டே வந்தது. லூய்சியானா கடற்கரையின் பதினாறு மைல் நீளத்திற்கும் ஒரே கறுப்புக் காட்சிதானா? ஏதோ ஒன்று நேர்ந்திருக்கிறது பூமியின் இருப்புக்கு விரோதமாய்.


தூரத்தில் என்னவோ குவியல் குவியலாய்...? ஓடிப்பேய் பார்த்தாள்.

ஓ ஜீசஸ்!

கொத்துக்கொத்தாய் செத்துக் கிடந்தன பெலிஹான் பறவைகள். அவற்றின், பழம் படுபனையின் கிழங்கு பிளந்தன்ன கூரிய அலகுகள் பல திறந்தே கிடந்தன. சில சிறகுகள் காட்டின ஜீவனின் கடைசி அசைவுகளை.

இன்னொரு பக்கம் பார்த்தாள் எமிலி; இழுத்த மூச்சை வெளியிட மறந்தாள். அலைகள் தூக்கியெறிந்த படகுகள் ஒன்றன்மேல் ஒன்றேறி ஒழுங்கற்றுக் கிடப்பதுபோல் கூட்டம் கூட்டமாய் இறந்து கிடந்தன நூற்றுக் கணக்கான டொல்ஃபின்கள்.





இழுத்த மூச்சை இப்போது விட்டதில் ஏறியிறங்கியது எமிலியின் மார்பு.

இன்னொருபுறம்-நெடுஞ்சாலை லொறியில் கொட்டிச் சிதறிய தானியங்களாய் ஆயிரக்கணக்கான மீன் வகைகள் இரைந்து கிடந்தன இறந்தும், இறவாமலும். சில மீன்களின் உயிர்கள் வெளியேறிக் கொண்டிருப்பது தெரிந்தது வால்களின் துடி துடிப்பில்.

என்ன கொடுமை இது!

யுகம் யுகமாய் உயிர்கள் படைத்த இயற்கை, ஒரே நாளில் அளிக்கப் பார்க்கிறதா? மிச்சம் இருக்கப்போகும் ஒரே பிராணி மனிதன்தானா? மனிதர்கள் இல்லாத உலகத்தில் விலங்குகளும் பறவைகளும் வாழமுடியும். ஆனால், மனிதரால் வாழமுடியுமா விலங்குகளும் பறவைகளும் அற்ற உலகத்தில் ?

இந்தப் பக்கம் மொத்தமாய் செத்துக் கிடந்தன ஹெரான் பறவைகள். அவற்றின் பேருடல்களுக்கு பொருத்தமில்லாத குச்சிக்கால்கள் பின்னிக்கிடந்தன ஒன்றோடொன்று.

"செத்த பறவைகளில் ஒன்றுதான் நேற்று என் கமராவில் மீன் பிடித்ததா?"

பறவைகளின் சினேகிதியாய் பிறந்து சுற்றுச் சூழல் பட்டதாரியாய் வளர்ந்த எமிலியின் நீலக் கண்கள் நீரூறின.

கர்ப்பிணி போல் வயிறு பெருத்த கடல் ஆமைகள் இறந்து கரை ஒதுங்கினவா, கரை ஒதுங்கி இறந்தனவா தெரியவில்லை. மெக்சிக்கோ விழிக்கவில்லை. மிசிசிப்பியின் கரைகளுக்கு எட்டவில்லை சேதி இன்னும்.

எமிலி தெளிந்தாள். தோள்களைக் குலுக்கித் துணிச்சலை அழைத்துக் கொண்டாள். ஓடி ஓடிப் படம் எடுத்தாள். எல்லா உடல்களிலும் எண்ணெய்ப் பிசுக்கு மட்டும் இருப்பது கண்டாள். சில அதிகாரிகளும் வீரர்களும் கடலுக்குள் விரைந்து கொண்டிருந்தார்கள் அவசரங்களின் முதுகில் ஏறி.



என்னவாயிற்று?

லூய்சியானா கடற்கரையிலிருந்து நாற்பத்தோராவது மைலில் மெக்சிக்கோ வளைகுடாவுக்குள் அது நிகழ்ந்தது.

எண்ணெய்க் கிணறு குடைந்த ஆழ்துளைக் கருவிகள் தம் சக்தியின் மொத்தம் திரட்டி ஆழத்தில் ஒரு முட்டு முட்டியபோது வெடித்து வெளியேறியது பூமிஜாடியில் பூட்டப் பட்டுக் கிடந்த மீத்தேன்(வாயு) பூதம். அது வெளிப்பட்ட வேகத்தில் பட்டென்று திறந்து கொண்டது பெட்ரோல் ஊற்றின் பெருங்கண்.

மீத்தேனும் பெட்ரோலும் முட்டிக் கொண்டதில் பற்றிக் கொண்டது. வளைகுடா; கடல் நீராலும் அதை அணைக்க முடியவில்லை. கடற்பரப்பில் இரண்டங்குலம் படர்ந்த பெட்ரோல் போகப் போகப் பத்தங்குலமாய்க் கெட்டிப் பட்டது. கடல் எங்கும் கசிவுதான். 580 சதுர மைலுக்கு எண்ணைப் போர்வைதான். எண்ணெயை சுவாசிக்கத் தெரியாத தண்ணீர் ஜீவிகளில் செத்துச் செத்து மிதந்தவை பல; கரை ஒதுங்கியவை சில; எரிகிறது கடல்; கறுப்பாடை கட்டுகிறது பூமி.

இந்தமனிதர்கள் பூமியின் முகத்தில் அறைவதையும், முதுகில் குத்துவதையும், வயிறு கீறுவதையும், கருவறையில் கம்பி நுழைப்பதையும் ஓசோன் கூரை ஓட்டை வழி எட்டி எட்டிப் பார்த்துவிட்டு ஓர் அழுக்கு மேகத்தை இழுத்து முகம் பொத்திக் கொண்டது சூரியன்.

பின்னொரு நாள்-

ஜப்பான் குலுங்கியது. பசுபிக் சமுத்திரம் எழுந்து சென்டாய் மீது விழுந்தது. இதுதான் ஊழியா? இன்னொரு ஹிரோஷிமாவா?

பூந்தொட்டியை இடம்மாற்றும் சீமாட்டியைப்போல நகரத்தின் மையத்தில் துறைமுகத்தைத் தூக்கி வைத்தது ஆழி அலை. 35000 அடி உயரத்தில் 700 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் ஆயிரம் விமானங்கள் அதே வேகத்தில் ஊருக்குள் புகுந்து தரையில் பறந்தால் எப்படி இருக்குமா? அப்படி இருந்தது நகரத்துக்குள் புகுந்த தண்ணீர் வேகம்.

உடம்பு உணர்ந்த சேதி மூளைக்குச் சென்று சேருவதற்குள் எல்லாம் முடிந்து விட்டது.

சடசடவென்று சரிந்தன மனிதன் தூக்கி நிறுத்திய தொழில்நுட்பங்கள். மரணம் படை திரட்டிக்கொண்டு வந்ததுபோல் சென்டாய் நகரத்தின் சகல வீதிகளிலும் புகுந்தது கடல். தன் சக்தி போதாது என்பது போல் துறைமுகத்தில் நின்ற படகுகளையும் கப்பல்களையும் கடப்பாரைகளாய்த் தூக்கி வந்து கையில் சிக்கிய கட்டடங்களை அடித்து இடித்தது அலை.

அலைகளில் மிதக்கும் பலூன்களாய்ப் பறந்தன கார்கள். சருகுகளாய் அந்தரத்தில் அலைந்தன அக்ரலிக் கூரைகள். இடியாத வீடுகளை, திருப்பி வரும்போது பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி சென்டாய் துறைமுகத்தின் அடிவண்டல் அள்ளி முன்னேறியகடல்.

நகரத்தின் வர்ணபேதங்களை அழித்து ஊருக்கெல்லாம் ஒரே நிறம் கறுப்பென்று கற்பித்துப்போனது.

வீட்டுக்குள் திருடப் போகிறவன் முதலில் குழந்தையின் குரல்வளை பிடித்து நசுக்கி விடுவது மாதிரி. மனிதர்களின் ஓலத்தைத் தன் ஓசைக்குள் புதைத்துக் கொண்டோடியது அத்து மீறிய வெள்ளம். (தொடரும்)

## அதிகாலை அழகை வழிபட வந்தவள்....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

328

## செங்கல் வீடு!

முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் பன்றி ஒன்று வாழ்ந்து வந்தது. அது மூன்று குட்டிகளை ஈன்றது. அவை மூன்றும் அழகாக இருந்தன.

நாட்கள் சென்றன. குட்டிகள் மூன்றும் வளர்ந்துவிட்டன.

மகன்களே! நீங்கள் இனி உங்கள் சொந்தக்கால்களிலேயே நிற்க வேண்டும். இங்கிருந்து புறப்படுங்கள். உங்கள் திறமைக்கும் முயற்சிக்கும் ஏற்ப வளமாக வாழுங்கள் என்றது.

அம்மா! நாங்கள் வருகிறோம்! என்று மூன்று குட்டிகளும் புறப்பட்டன. அவை வெகுதொலைவு நடந்தன. அப்போது வைக்கோல் போரைத் தலையில் சுமந்தபடி ஒருவன் அவற்றின் எதிரில் வந்தான்.

அவனைப்பார்த்து முதலாவது பன்றிக்குட்டி வைக்கோல் போரை எனக்குத்தா. நான் அதில் வீடுகட்டி இங்கேயே குடியிருக்கிறேன் என்றது. அவனும் வைக்கோல் போரை அதனிடம் தந்தான். அதில் வீடு ஒன்றைக் கட்டிக்குடியேறியது முதலாவது குட்டி.

ஏனைய இரண்டு பன்றிக்குட்டிகளும் அங்கிருந்து வெகுதொலைவு நடந்தன. அவற்றின் எதிரில் கீற்றுக்களைச் சுமந்தபடி ஒருவன் வந்தான். அவனிடம் இருந்து இரண்டாவது பன்றிக்குட்டி கீற்றுக்களை வாங்கி அங்கேயே குடிசை போட்டுத் தங்கியது.

மூன்றாவது பன்றிக்குட்டி அங்கிருந்து புறப்பட்டது. வெகு தொலைவு சென்றது. வண்டி நிறையச் செங்கற்களுடன் ஒருவன் அதன் எதிரில் வந்தான். அவனிடம் செங்கற்களை வாங் கியது அது. உறுதியான வீடு ஒன்று கட்டியது. அதில் குடியிருக்கத் தொடங்கியது.

அந்தக்காட்டில் கொடிய ஓநாய் ஒன்று இருந்தது. உணவு தேடி அலைந்த அது வைக்கோல் குடிசையைப் பார்த்தது. உள்ளே பன்றிக்குட்டி இருப்பதைப் பார்த்து அதன் நாவில் எச்சில் ஊறியது. கதவைத் தட்டிய அது பன்றிக் குட்டியே குடிசைக்குள் வரலாமா? என்று கேட்டது.

ஓநாயைப் பார்த்துப் பன்றிக்குட்டி உன்னை நான் உள்ளே அனுமதிக்கமாட்டேன் என்றது. அனுமதிக்கமாட்டாயா? என் வாயினால் ஊதி இந்தக் குடிசையைப் பறக்கச் செய்வேன் என் வலிமை தெரியாமல் பிதற்றுகிறாய்? என்று மிரட்டியது ஓநாய்.

உன்னால் முடியுமானால் செய்துகொள் என்றது பன்றி. கோபத்தால் உறுமிய ஓநாய் தன் மூச்சை உள்ளுக்கு இழுத்தது. தன் வலிமையைக் கொண்டு காற்றை வெளியே ஊதியது. அந்த வைக்கோல் குடிசை அப்படியே பறந்து சென்றது.

என்ன செய்வது என்று தெரியாமல் நடுங்கியபடி நின்றது பன்றிக்குட்டி. அதன்மீது பாய்ந்த ஓநாய் அதை அப்படியே விழுங்கியது.

வைக்கோல் குடிசையை வைத்து என்னிடம் தப்பிக்கப் பார்த்தாயா? இப்போது நீ என் வயிற்றுக்குள் என்று மகிழ்ச்சியாகப் பாடிக்கொண்டே அங்கிருந்து சென்றது ஓநாய்.


அதன் கண்ணில் கீற்றுக்குடிசை பட்டது. அதற்குள்ளும் பன்றிக்குட்டி இருப்பதைப்பார்த்தது.

அந்தக்குடிசையின் கதவைத் தட்டியது அது. பன்றிக்குட்டியே கதவைத் திற என்று அதட்டியது. நான் கதவைத் திறக்கமாட்டேன் வேறு எங்காவது போ என்றது பன்றிக்குட்டி. உனக்கு அவ்வளவு திமிரா? உன்னை என்ன செய்கிறேன் பார். இந்தக் கீற்றுக்குடிசை என் வலிமையைத் தாங்குமா? என்று உறுமியது.

வேகமாகத் தன் மூச்சை இழுத்துக் குடிசையை நோக்கி ஊதியது. கீற்றுக்கள் பறந்து சென்றன. அந்தப் பன்றிக்குட்டியையும் விழுங்கியது.

இரண்டு பன்றிக்குட்டிகளையும் உண்ட அதனால் நடக்கமுடியவில்லை. தள்ளாடியபடியே நடந்தது.

செங்கல்லால் கட்டப்பட்ட வீடும் அதன் கண்ணில் பட்டது. அருகே சென்ற அது ஜன்னல் வழியாக உள்ளே பார்த்து ஆ! இங்கும் கொழுத்த பன்றிக்குட்டி ஒன்று உள்ளது என்று துள்ளிக் குதித்தது.



கதவைத்தட்டிய அது பன்றிக் குட்டியே கதவைத்திற. நான் உள்ளே வரவேண்டும் என்று அதட்டியது. நான் கதவைத் திறக்கமாட்டேன் என்றது அந்தப் பன்றிக்குட்டி.

கதவைத் திறக்கமாட்டாயா? இப்படித்தான் உன் அண்ணன்களும் சொன்னார்கள். என் வாயினால் ஊதி அவர்கள் குடிசைகளைப் பறக்கச் செய்தேன். அவர்கள் இப்போது என் வயிற்றுக்குள். மரியாதையாகக் கதவைத்திற என்று மிரட்டியது அது.

உன்னால் முடிந்ததைச் செய்து கொள். நான் கதவைத்திறக்க மாட்டேன் என்றது பன்றிக்குட்டி. கோபம் கொண்ட ஓநாய் வலிமை கொண்டு ஊதியது. ஆனால் அந்த வீடு சிறிதும் அசையவில்லை. மீண்டும் மீண்டும் மூச்சு வாங்கி வேகமாக ஊதியது. அப்போதும் அசையவில்லை.

ஊதி ஊதிக் களைப்பு அடைந்தது ஓநாய். வலிமை வாய்ந்த அந்த வீட்டை ஒன்றும் செய்யமுடியாது. முயற்சி செய்வதால் பயன் இல்லை என்பது அதற்குப்புரிந்தது.

பன்றிக்குட்டியை ஏமாற்ற சூழ்ச்சி ஒன்று அதற்குத் தோன்றியது. இனிமையான குரலில் அது நண்பா! நீ பசியால் வாடுகிறாய். சுவையான முள்ளங்கி ஏராளமாக விளைந்து உள்ளது. என்னுடன் வந்தால் இருவரும் மகிழ்ச்சியாக உண்ணலாம் என்றது.

ஓநாயின் சூழ்ச்சி பன்றிக்குட்டிக்குப் புரிந்தது. சுவையான முள்ளங்கியா? எங்கே விளைந்தது? நாம் எப்போது அங்கே போகலாம்? என்று ஏதும் அறியாதது போலக்கேட்டது.

முனியனின் நிலத்தில்தான் விளைந்துள்ளது. நாளை காலையில் நாம் இருவரும் அங்கே போவோம் என்றது ஓநாய். எத்தனை மணிக்கு நீ இங்கே வருவாய்? காலை ஆறுமணிக்கு இங்கே இருப்பேன் என்று புறப்பட்டது ஓநாய்.

மறுநாள் காலையில் நான்கு மணிக்கு முனியனின் நிலத்தை அடைந்தது பன்றிக்குட்டி. அங்கிருந்த முள்ளங்கிகளைப் பறித்த அது வீட்டிற்குக் கொண்டு வந்தது. ஆறு மணிக்கு அங்கு வந்தது ஓநாய். வீட்டுக்கதவு தாழிடப்பட்டிருப்பதைப் பார்த்தது.

பன்றிக்குட்டியே நாம் புறப்படலாமா? என்று கேட்டது. சிரித்த பன்றிக்குட்டி ஓநாயே! நான்கு மணிக்கே நான் சென்று முள்ளங்கிகளைப் பறித்து வந்துவிட்டேன். ஆ! என்ன சுவை! நீ அங்கே போனால் ஒரு முள்ளங்கியும் கிடைக்காது என்றது.

இந்தப் பன்றிக்குட்டி என்னை ஏமாற்றிவிட்டதே... இதை எப்படியும் கொன்று தின்ன வேண்டும் என்ற வெறி அதற்கு ஏற்பட்டது. அந்த வீட்டுச்சுவரில் வேகமாக மோதியது. சுவர் சிறிதும் அசையவில்லை. உடல் வலி தான் அதற்கு ஏற்பட்டது. பன்றிக்குட்டியைக் கொல்ல வேறு சூழ்ச்சி தான் செய்யவேண்டும் என்று நினைத்தது. பன்றிக்குட்டியே சுவையான மாம்பழங்கள் ஒரு மரத்தில் பழுத் துத் தொங்குகின்றன. அப்படிப் பட்ட பழங்களை நீ சாப்பிட்டே இருக்கமுடியாது என்று இனிமையாகப் பேசியது.

ஓநாயே! அந்த மாமரம் எங்கே உள்ளது? பொன்னியின் தோட்டத் தில் உள்ளது. நாளை காலை ஆறு மணிக்கு இங்கு வருவேன். நாம் இருவரும் அங்கே சென்று மாம்ப ழங்களைச் சுவைத்து உண்ணலாம். இன்றுபோல என்னை ஏமாற்றி விடக்கூடாது என்று புறப்பட்டது ஓநாய். மறுநாள் காலையில் மூன்று மணிக்கே எழுந்தது பன்றிக்குட்டி. ஓநாயை இன்றும் ஏமாற்றவேண்டும் என்று நினைத்தது.

பொன்னியின் தோட்டத்தை அடைந்த அது மரத்தின் மேல் ஏறியது. மாம்பழங்களைப் பறித்துத் தின்றது. ஓநாயின் குரல்கேட்டுத் திகைப்புடன் கீழே பார்த்தது. அங்கே ஓநாய் நின்றிருந்தது. பன்றிக்குட்டியே நீ இப்படி என்னை ஏமாற்றுவாய் என்பது தெரியும். அதனால் தான் முன்னரே இங்கு வந்தேன். இனி உன்னால் என்னிடம் இருந்து தப்பமுடியாது என்று மிரட்டியது.

ஓநாயிடம் இருந்து தப்பிக்க ஏதேனும் வழியுள்ளதா என்று சிந்தித்தது பன்றிக்குட்டி. அறிவு நிறைந்த அதற்கு நல்ல வழி ஒன்று தோன்றியது. ஓநாயே சுவையான மாம்பழங்களைப் பறித்து மடியில் வைத்துள்ளேன். உனக்குச்சில பழங்களைப் போடுகிறேன் சாப்பிடுகிறாயா?

போடு! மாம்பழங்களைச் சாப்பிட்டு விட்டு உன்னைச் சாப்பிடுகிறேன் என்றது ஓநாய். ஒவ்வொரு பழமாக எடுத்துச் சிறிது தொலைவில் எறிந்தது பன்றிக்குட்டி. அதன் சூழ்ச்சியை ஓநாய் அறியவில்லை. அங்கும் இங்கும் ஓடிப்பழத்தைத் தின்றது.

ஒரு பழத்தை வெகு தொலைவு தூக்கி எறிந்தது. அதை உண்பதற்காக ஓநாய் ஓடியது. வாய்ப்பை எதிர் பார்த்திருந்த பன்றிக்குட்டி மரத்திலிருந்து குதித்தது. ஒரே ஓட்டமாக ஓடித் தன் வீட்டிற்குள் நுழைந்தது. கதவைத் தாழ்ப்பாள் போட்டது.

ஐயோ! அந்தப் பன்றிக்குட்டி மீண்டும் என்னை ஏமாற்றிவிட்டதே. இன்று என்ன நடந்தாலும் அதைக் கொல்லாமல் விடுவது இல்லை என்று கோபத்தால் துடித்தது ஓநாய். பன்றிக்குட்டியின் வீட்டை அடைந்தது அது. வீட்டிற்குள் நழைய ஏதேனும் வழி உள்ளதா என்று பார்த்தது. வீட்டின் மேலே இருந்த புகைபோக்கி அதன் கண்ணில் பட்டது.

புகைபோக்கி வழியாக வீட்டிற்குள் குதிப்போம். அந்தப்பன்றிக் குட்டியால் தப்பமுடியாது என்று நினைத்தது அது. வீட்டின் மேலே ஏறியது. ஓநாய் எப்படியும் உள்ளே நுழைய முயற்சி செய்யும். புகைபோக்கி வழியாக அது குதிக்கும் என்று எதிர் பார்த்தது பன்றிக்குட்டி.

அடுப்பின் மேல் பெரிய தொட்டியை வைத்தது. அந்தத் தொட்டி நிறையத் தண்ணீரை ஊற்றி அடுப்பில் தீ மூட்டியது. தண்ணீர் கொதிக்கத் தொடங்கியது. அங்கே புகைபோக்கி அருகே சென்றது ஓநாய். வீட்டிற்குள் நடப்பது எதுவும் அதற்குத் தெரியவில்லை.

புகைபோக்கி வழியாகக் கீழே குதித்தது. கொதிக்கும் வெந்நீருக்குள் அப்படியே விழுந்தது. உடல் வெந்து துடிதுடித்து இறந்தது. நன்கு வெந்துபோன அதன் உடலை வெளியே எடுத்தது பன்றிக்குட்டி.

என் அண்ணன்களைக்கொன்ற உன்னைப்பழிவாங்கி விட்டேன் என்று கூத்தாடியது பன்றி. வலிமையான செங்கல் கட்டடத்திலேயே நீண்ட காலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊ.சே.நிதிய கணக்குகளை மத்திய வங்கி வெளியிடவேண்டும்

## ஹர்ச டி சில்வா எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் 2011 ஆம் ஆண்டு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் விபரங்களை இலங்கை மத்திய வங்கி வெளியிடவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா இக்கோரிக்கையை விடுத்துள்ளார். இந்த அறிக்கை 2013 ஆம் ஆண்டிலாவது வெளியிடப்படுமா? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலட்சக்கணக்கான ஊழியர்களின் சேமலாப நிதிகளில் முறைகேடான செயற்படுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை எவ்வித அனுமதியும் இன்றி கொழும்பு பங்கு சந்தையில் முதலீடு செய்யப்பட்டு அதில் பாரிய நட்டமும் ஏற்பட்டது.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் இது தொடர்பான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதாக கூறப்பட்ட போதும் இதுவரை அது சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த முறைகேடான கணக்குப் பரிமாற்றத்தில் சுமார் ஆயிரம் பில்லியன் ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதனால் பல மில்லியன் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சிறைச்சாலை ஊழியர்கள் 172 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைச்சாலைகளைச் சேர்ந்த 172 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரே இடத்தில் பத்து, பதினைந்து ஆண்டுகள் கடமையாற்றும் போது ஊழல் மோசடிகள் இடம்பெற வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வருடாந்த இடமாற்ற கோட்பாடுகளுக்கு அமைவாகவே இந்த இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன

நீண்ட காலம் ஒரே சிறைச்சாலையில் கடமையாற்றுவதனால் கைதிகளுடன் நட்புறவு ஏற்பட்டு விடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறு நட்புறவு ஏற்படுவதனால் கைதிகளின் குற்றச் செயல்களுக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் ஐந்தாண்டுக்கு மேல் ஒரே சிறைச்சாலையில் கடமையாற்ற முடியாது என சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# யாழில் மூக்குக் கண்ணாடி உற்பத்தி நிலையம் அமையும்

(கொழும்பு)

மூக்குக் கண்ணாடி உற்பத்தி செய்யும் மேலும் இரு நிலையங்களை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணம், பதுளை வைத்தியசாலைகளில் இந்நிலையங்களை அமைக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மகேபால தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி போதனா வைத்தியசாலை ஆகியவற்றிலும் மூக்குக் கண்ணாடி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இப்புதிய நிலையங்கள் மூலம் வருடம் ஒன்றிற்கு 20 ஆயிரத்திற்கும் மேலான மூக்குக்கண்ணாடிகளை உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்ப்பதாக மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அதிக பாலை உற்பத்தி செய்ய புல் உற்பத்தி திட்டம் அறிமுகம்

## கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

குறைந்த உற்பத்தி செலவுடன் பாலுற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்றை யாழ். கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக புல் வளர்ப்பின் மூலம் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதாக அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கென பண்ணை உற்பத்தியாளர்களுக்கு புற்துண்டங்கள் வழங்கி வைக்கப்பட்டு புல் வளர்ப்பிற்கான ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் கடந்த மாதமளவில் யாழ். மாவட்ட பண்ணை உற்பத்தியாளர்களுக்கு ஒரு இலட்சம் புற்துண்டங்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரமான புல்லை வளர்ப்பதன் மூலம் பாலுற்பத்திக்கான செலவு குறைக்கப்படுவதாக கூறும் யாழ். கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தற்போது வழங்கப்பட்ட புற்துண்டங்களினை சிறந்த முறையில் வளர்ப்பித்து பயன்படுத்தும் பண்ணைத் தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

இதற்காக பண்ணையாளர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கென நீர் இறைக்கும் இயந்திரம் திணைக்களத்திற்கு வருவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் விதத்தில் கால்நடைகள் மற்றும் வேறு ஊக்குவிப்புகள் வழங்கப்படுகின்றபோதும் தற்போது குறைந்த செலவில் பாலுற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்களையே மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### வவு.தொ.நு.கல்லூரியில் புதிய பாடங்கள்

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் அடிப்படை ஆங்கிலம் மற்றும் சிங்களப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இம்முறை க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தோற்றியவர்களுக்கு போக்குவரத்து வசதிகளுடன் இலசவசமாக இரண்டரை மாத அடிப்படை ஆங்கிலக் கல்விநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அப்பாடநெறியானது காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை இடம்பெறும் எனவும் தெரிவித்த அவர் எதிர்வரும் 7ஆம் திகதி பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையினால் விண்ணப்பப் படிவங்களை தொழில்நுட்பக்கல்லூரியில் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளார்.

இதேவேளை தொழில் புரிவோருக்கான சிங்கள பயிற்சிநெறி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் தொழில்புரிவோர் தகுதியான சான்றிதழைப்பெறும் நோக்குடன் இக்கற்கை நெறியை தொடரமுடியும் எனவும் தெரிவித்துள்ளார். (அ-9-266)

# ஜனாதிபதியும் படையினருமே தமிழ்மக்களை விடுவித்தனர்

## தூதுவர் பந்துல பெருமிதம்

(கொழும்பு)

இந்தியாவை போலன்றி இலங்கையில் மாத்திரமே தேசியக் கொடியில் தமிழர்களுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய சிட்னியின் இலங்கை தூதரக அதிகாரியாக கடமையாற்றும் பந்துல ஜெயசேகர இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தமிழ், முஸ்லிம் தலைவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் தேசியக் கொடியின் வடிவம் தீர்மானிக்கப்பட்டதாக கென்பரா டைம்ஸுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக குற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ள அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் படையினருமே தமிழர்களை விடுவித்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஒரே இரவில் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது என்றும் பந்துல ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★ 1492-ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட கடைசி நகரமான கிரனாடா சரணடைந்தது.

★ 1757-கொல்கத்தாவை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.

★ 1782-பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அட்மிரல் எட்வெர்ட் ஹியூஸ் தலைமையில் இந்தியாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

★ 1791-ஒகைய்யோ மாநிலத்தில் குழந்தைகள் உட்பட குடியேற்றவாசிகள் 14 பேரை இந்திய ஆதிகுடிகள் படுகொலை செய்தனர்.

★ 1793- ரஷ்யாவும் புரூசியாவும் போலந்தை பங்கிட்டன.

★ 1893-வட அமெரிக்காவில் தொடரூந்துப் பாதைகளில் நேரத்தை அளவிடும் குரோனோமீற்றர்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

★ 1905-ரஷ்யக் கடற்படையினர் சீனாவில் போர்ட் ஆதரில் ஜப்பானியரிடம் சரணடைந்தனர்.

★ 1921-ஸ்பெயினின் சாண்டா இசபெல் கப்பல் மூழ்கியதில் 244 பேர் உயிரிழந்தனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: வேல்ஸில் கார்டிஃப் என்ற இடத்தில் லாண்டாஃப் தேவாலய ஜேர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதம் அடைந்தது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: மணிலா ஜப்பானியரினால் கைப்பற்றப் பட்டது.

★ 1955- பனாமாவின் ஜனாதிபதி ஜோசே அன்ரோனியோ ரெமோன் படுகொலை செய்யப்பட்டார்.

★ 1959- முதலாவது செயற்கைச் செய்மதி லூனா 1 சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1971-கிளாஸ்கோவில் உதைபந்தாட்ட மைதானம் ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் சிறுவர்கள் உட்பட 66 பேர் உயிரிழந்தனர்.

★ 1982-சோமாலிய அரசுக்கு எதிரான தமது முதலாவது இராணுவ நடவடிக்கையை சோமாலிய தேசிய இயக்கம் தொடங்கியது. சோமாலியாவின் வடபகுதியில் அரசியல் கைதிகளை விடுவித்தனர்.

★ 1993-யாழ்ப்பாணம், கிளாலி நீரேரியில் 50 இற்கும் மேற்பட்ட பயணிகள் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1999-விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற பலத்த பனிப் புயலில் சிக்கி 68 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-மன்னாரில் இலுப்பைக்கடவையில் இடம்பெற்ற வான் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் உயிரிழந்தனர். 40 பேர் படுகாயமடைந்தனர்.

**பிறப்பு**

★ 1940-எஸ்.ஆர்.ஸ்ரீனிவாச வரதன், ஏபெல் பரிசு பெற்ற கணித இயலர்

**இறப்புக்கள்**

★ 1782-கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன், இலங்கையின் கண்டியை ஆண்ட கடைசி அரசன்

★ 1876-மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தமிழறிஞர் (பி.1815)

★ 1960-தி.வை.சதாசிவ பண்டாரத்தார், தமிழக வரலாற்று அறிஞர் (பி.1892)

**சதாசிவ பண்டாரத்தார்**

தி.வை.சதாசிவ பண்டாரத்தார் ஒரு தமிழ் வரலாற்றாளர். கும்பகோணம் அருகே திருப்புறம்பியத்தில் வைத்தியலிங்கப் பண்டாரத்தாருக்கும் மீனாட்சியம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.

1942-1953, 1953-60 கால கட்டங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழாராய்ச்சித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பல இடங்களுக்கும் சென்று சோழர் வரலாற்றை ஆய்வு செய்து பிற்கால சோழர் சரித்திரம் என்னும் பெரு நூலை எழுதினார். இது மூன்று தொகுதிகளாக 1949, 51 மற்றும் 61 ஆம் ஆண்டுகளில் வெளியானது. இரு தமிழ் இலக்கிய வரலாறு நூல்களும் பல வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். தமிழக அரசு இவரது படைப்புக்களை நாட்டுடைமையாக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மடியில் கனமிருந்தால் வழியில் பயமிருக்கும்’

போருக்குப் பிந்திய சூழலில், இலங்கை இராணுவத்துடனும் நெருக்கமான உறவுகளைப் பேணி வருகின்ற ஒருவர் தான் மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பெற்றுக் கொண்ட இராணுவ வெற்றியானது. அரசியல் மீளிணக்கப்பாட்டுக்கு பதிலீடாக முடியாது என்று அவர் வெளியிட்டுள்ள கருத்து, இலங்கை அரசாங்கத் தரப்பினால் அவ்வளவு சகிப்புக்குரியதாக இருக்க மாட்டாது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொண்ட இராணுவவெற்றி, மிகப் பிரமாண்டமானது. அதை யாரும் குறைத்து மதிப்பிடமுடியாது. இந்த வெற்றி அடையப்பட்ட வழிமுறைகள், கையாளப்பட்ட தந்திரங்கள், இந்த வெற்றியின்போது மனித உயிர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் பற்றிய சர்ச்சைகள் இருந்தாலும் இதன் இறுதிப் பெறுபேறு கேள்விக் குட்பட்டது அல்ல.


அதாவது, தமிழரின் ஆயுதப் போராட்டத்தை ஆயுதபலத்தின் மூலம் அடக்கமுடியாது என்ற காலம்காலமாக நம்பப்பட்டுவந்த கருத்தை உடைத்து, உச்சக்கட்ட இராணுவ வெற்றியை இலங்கை அரசாங்கம் தனது படைபலத்தின் மூலம் அடைந்தது.

முடியாது என்ற சொல்லப்பட்டு வந்த ஒன்றை, முடியும் என்று செய்துகாட்டியது மகிந்த இராஜபக்சவின் அரசாங்கம்.

சர்வதேச அரசியல் சூழமைவுகளும் அதற்குச் சாதகமாக அமைந்து போயின.

ஆனால், இந்த வெற்றியை நிரந்தரப்படுத்திக் கொள்வதில் அரசாங்கம் படிப்படியாகத் தோல்வியைச் சந்தித்து வருகிறது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமே.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டமை, பாதுகாப்பு வலயங்கள் சுருக்கப்பட்டமை, பெரும்பாலான முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட்டமை, இராணுவத்தின் படைப் பிரிவுகள் பல வடக்கிற்கு அப்பால் மீள்நிலைப்படுத்தப்பட்டமை, பொருளாதார அபிவிருத்தி போன்ற மாற்றங்கள் இந்தக் காலகட்டத்தின் மிகப்பெரிய சாதனைகளாக அரசாங்கத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்த



மூன்றரை ஆண்டுகளில் அடையப்பட்ட சாதனையாக இவற்றையெல்லாம் பட்டியலிடும் அரசாங்கம், பிரதானமான விடயத்தை மறந்தேவிட்டது. எதற்காக தமிழர்களின் ஆயுதப்போராட்டம் தொடங்கியதோ- விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் எதை மையப்படுத்தியதாக இருந்ததோ-அதற்கான காரணங்களை களைவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது.

ஆயுதப் போராட்டத்தின் அடிப்படையாக இருந்தது இனப்பிரச்சினை.

அதற்கு நியாயமாக அரசியல் தீர்வைக்காண அரசாங்கம் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யவில்லை.

வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஒழுங்குகளை இன்னமும் செய்யவில்லை.

அதைவிட இன்னமும் இராணுவச் சூழலுக்குள் இருந்து வடக்கு- கிழக்கை வெளியே கொண்டு வரவில்லை.

வடக்கில் பெரியளவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தை அகற்ற அரசாங்கம் தயாராக இல்லை.

பாதுகாப்புக்கு அவர்கள் அவசியம் என்கிறது அரசாங்கம்.

மடியில் கனம் இருந்தால்தான் வழியில் பயம் இருக்கும் என்றொரு பழமொழி உள்ளது. அரசாங்கம் இன்னமும் தனது மடியில் இருக்கும் நெருப்பை கீழே கொட்டி விடவில்லை. அதனால்தான் அதற்கு அச்சம் அதிகமாக உள்ளது. தமிழர்களுக்கு உரிய அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்கினால் நிச்சயமாக இன்னொரு ஆயுதப்போராட்டம் பற்றி அரசாங்கம் அச்சம் கொள்ளவேண்டிய நிலை ஏற்படாது. ஆனால், அரசாங்கமோ வெறும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வசதிவாய்ப்புகளைக் காட்டி, நிரந்திர அமைதியை உருவாக்கும் கனவில்தான் இந்த மூன்றரை ஆண்டுகளையும் கடத்தியுள்ளது. இன்னமும் அதே நம்பிக்கையில்தான் இருக்கிறது. ஆனால், இந்த நம்பிக்கை ஆபத்தானது, என்பதை வலியுறுத்தும் வகையில் தான், அரசியல் மீளிணக்கப்பாட்டுக்கு இராணுவவெற்றி பதிலீடாக முடியாது என்று மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் மீளிணக்கப்பாட்டிற்கு அதிகாரப்பகிர்வும், பொறுப்புக் கூறலும் முக்கியமானவை என்றும் அவர் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

முன்று தசாப்தகால ஆயுதப் போராட்டத்தையே முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டோம். அதை வைத்து நிரந்தர அமைதியையா உருவாக்க முடியாது என்ற தோரணையில்தான் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. உலகவரலாற்றில் இராணுவ வெற்றியின் மூலம் அடையப்பட்ட எந்தவொரு வெற்றியும் அரசியல் மீளிணக்கப்பாடு உருவாக்கப்படாமல் நிலை பெற்றதில்லை. பிரித்தானிய பேரரசு, தனது படை பலத்தின் மூலம், இணைத்துக்கொண்ட ஸ்கொட்லாந்து மக்களின், தனிநாட்டிற்கான கோரிக்கை, முன்னூறு ஆண்டுகளைத் தாண்டி இப்போதும் தொடர்ந்து வருகிறது. இதன்காரணமாகவே தனிநாடு தொடர்பான கருத்து வாக்கெடுப்பை நடத்த பிரித்தானியா அண்மையில் இணங்கியது.

வட அயர்லாந்திலும்கூட சுதந்திரக் கோரிக்கைக்கான தாகம் தணியவில்லை. இவை அரசியல் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தத் தவறிய இராணுவ வெற்றிகள், தோற்றுப் போனதற்கான உதாரணங்கள்.

இதுபோல பல உதாரணங்கள் உள்ளன.

பொருளாதார ரீதியாக பிரித்தானியா எவ்வளவோ செய்தபோதும் தனித்துப் பிரிந்துபோகும் எண்ணம் ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து மக்களிடம் இருந்து மறையவில்லை. அதேபோலத் தான் இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ள இராணுவவெற்றி மூலம் நாட்டில் நிரந்தரமான அமைதியை கொண்டுவர முடியாது. அத்தகைய நிரந்தர அமைதியை உருவாக்குவதற்கு பொருளாதார உதவிகள், வளர்ச்சிகளே போதுமானதென்ற கருத்தில் இருந்து அரசாங்கம் விலகாது போனால், மூன்று தசாப்தகால ஆயுதப்போராட்டத்தை அடக்கிய இராணுவ வெற்றியை நிலைநிறுத்துவது முடியாத காரியமாகவே இருக்கும். அரசாங்கத்தின் இந்த அணுகுமுறை தனது இராணுவ வெற்றியை தானே பலவீனப்படுத்திக் கொள்வதாகவே முடியும்.

-சுபத்ரா-



## அசோக் மேத்தாவின் கூற்றிலிருந்து...

மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் பெறப்பட்ட அந்த இராணுவ வெற்றியை இலங்கை அரசாங்கம் நிரந்தரமானதாக்கிக் கொள்ளும் நடவடிக்கையை இன்னும் மேற்கொள்ளவில்லையென்பதே சர்வதேச ஆய்வாளர்கள், நிபுணர்களின் கருத்து.

திரும்பத்திரும்ப வலியுறுத்தப் பட்டுவரும் இந்தக் கருத்தை அரசாங்கம் அவ்வளவாக கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை. கடந்தவாரம் இந்தியாவின் எக்கனொமிக் ரைம்ஸ் இதழில் மேஜர் ஜெனரல் அசோக் மேத்த இதை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இவர் ஒன்றும் இலங்கையின் நிலைமையை தொலைவில் இருந்து பார்த்தவர் அல்லர். 1980களின் இறுதியில் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையின் தளபதிகளில் ஒருவராகப் பணியாற்றியவர். இந்திய இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பாதுகாப்புத் துறைசார் ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்பவர். விடுதலைப்புலிகளின் தந்திரங்களையும், இலங்கை இராணுவத்தின் வரலாற்றையும்கூட நன்றாகவே அறிந்து வைத்திருப்பவர். போருக்குப் பின்னர் பலமுறை வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு வந்து நிலைமைகளை ஆராய்ந்துள்ளவர்.

இவர், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொண்ட இராணுவ வெற்றி, அரசியல் மீளிணக்கப் பாட்டிற்கு பதிலீடாக அமைய முடியாது என்று தெரிவித்துள்ளதோடு, போருக்குப் பின்னர் வடக்கு கிழக்கில் இலங்கை அரசாங்கம், நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்களை பட்டியல் போட்டு சுட்டிக் காட்டியுள்ளார்.

மீள்குடியமர்வு, கண்ணிவெடிகள் அகற்றப்பட்டமை, பாதுகாப்பு வலயங்கள் சுருக்கப்பட்டமை, முன்னைநாட்போராளிகளின் விடுதலை, படைப்பிரிவுகள் மீள்நிலைப்படுத் தப்பட்டமை, பொருளாதார அபிவிருத்தி மாற்றங்கள் குறித்து அவர் இதில் பட்டியலிட்டுள்ளார். ஆனால், இன்னமும் அரசியல் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். போரில் இலங்கை பெற்ற வெற்றியை நிலைநிறுத்துவதற்கு அதிகாரங்களைப் பகிரும், அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், பொறுப்புக் கூறலும் மிக முக்கியமானவையாக உள்ளன என்றும் மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லி பெண் தொடர்பில் பேச இலங்கைக்கு தகுதி கிடையாது

## கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ்.பாஸ்கரா

(கொழும்பு)

புதுடில்லியில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகாயமடைந்து மரணமான இந்திய மாணவி தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கொழும்பு மாநகர சபை ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ்.பாஸ்கரா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

புதுடில்லியில் நடைபெற்ற மாணவி மீதான பாலியல் வல்லுறவு கொலை தொடர்பாக ஐ.தே.கவின் மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு மாநாகர சபை ஐ.தே.க. உறுப்பினர்களின் பிரதான பங்குபற்றலில் ஒரு ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பெறப்பட்ட கையெழுத்து மனு இலங்கையிலுள்ள இந்திய தூதுவரிடம் கையளிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

மாநகர சபை முன்றலில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும்படி ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் கட்சி தலைவர் மனோ கணேசனின் அறிவுறுத்தலின் பேரில் நமது கட்சி உறுப்பினர்கள் எவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இக் கொடூர செயல் குறித்து நாம் அக்கறை கொண்டுள்ளோம். அதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந் நாட்டில் இன்று தமிழ் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பம் டில்லி பெண்ணின் நிலைமையை விட பல மடங்கு பாரதூரமானதாகும் என்பது எமது நிலைப்பாடாகும்.

குறிப்பாக இன்று வன்னியிலே நிர்க்கதியாகியுள்ள தமிழ் பெண்கள் பெரும் உடல், உள துன்பங்களை சந்திக்கின்றனர். நடந்து முடிந்த போரின் போதும் போர் முடிந்து அகதி முகாம்களில் அடைப்பட்டிருந்தபோதும் நமது பெண்கள் மிகப்பெரும் அவலங்களை சந்தித்திருந்தனர். இந்த அவலங்கள் இன்றும் தொடர்கின்றன.

எனவே, நமது பெண்கள் அவல நிலையில் வாழும் பொழுது அதை அறியாதது போல் டில்லியில் பெண் தொடர்பாக நாம் செயல்பட முடியாது. நம் நாட்டு தமிழ் பெண்களின் அவல நிலையை ஐ.தே.க. பெண்கள் சங்கத்தினர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை இன்றைய ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்த ஐ.தே.க.வினருக்கும் நாம் எடுத்து கூறியுள்ளோம் என்றார். (அ-2)

# கட்சி செயலாளர்களுடன் தே.ஆணையாளர் சந்திப்பு

பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிசெயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு இடையே விசேட சந்திப்பொன்று நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

மாகாண சபைகள் சட்ட மூலத்தில் புதிய திருத்தம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை, 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் கையொப்பம் இடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டார். அதன்படி குறித்த வாக்காளர் இடாப்பு நேற்று தொடக்கம் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# குவைத்தில் மாந்திரீக வேலையில் ஈடுபட்ட இலங்கையர் கைது

குவைத்தில் நகரப்பகுதியில் மாந்திரீக வேலைகளில் ஈடுபட்டு வந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் குவைத் நாட்டின் குற்ற புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர் தனக்கு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய சக்தி உள்ளது எனக் கூறி மாந்திரீக வேலைகளில் ஈடுபட்டுள்ளார். இவர் இதற்கான கட்டணமாக 150 குவைத் டினார்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த நபர் குறித்து பொலிசாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் பின்னரே புலனாய்வுப் பிரிவினர் அந்நபரை தொடர்ந்தும் அவதானித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் புலனாய்வுப் பிரிவினர் விரித்த சதி வலைக்கு இணங்க அந்நபர் ஒருவரிடமிருந்து தனது மாந்திரீக வேலைக்கான பணமாக 20 குவைத் டினாரை பெறும் போது கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# நீதவான்கள் சுயாதீனமாக தீர்ப்புக்களை வழங்க வேண்டும்

## அமைச்சர் ரட்ணசிறி

நீதவான்கள் சுயாதீனமான முறையில் தீர்ப்புக்களை வழங்க முடியாவிட்டால் மக்கள் நம்பிக்கை இழப்பர் என சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரன மில்லவ புவக்வத்த பாதை திறப்பு விழாவில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றிற்கும் இடையில் முரண்பாடு நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஒற்றுமையுடனும் இணக்கப்பாட்டுடனும் செயற்படுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். பொதுமக்களின் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் ஒன்றை விடவும் மற்றொன்று பெரிது எனக் கருதக்கூடாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# குச்சவெளி கடலில் மிதந்து வந்த சடலம்

திருகோணமலை-குச்சவெளி கடற்பரப்பில் மரங்களுடன் மிதந்து வந்த மனித உடற்பாகம் மீட்கப்பட்டுள்ளது. 25 அடி நீளமான மரங்கள் கடற்பரப்பில் மிதந்ததைத் தொடர்ந்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் குச்சவெளி பொலிஸ் மற்றும் கடற்படையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடற்பரப்பில் படகு விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பொன்னாங்காணியின் மருத்துவப் பண்புகள்

### பொன்னாங்காணி

பொன்னாங்கண்ணி என்பது பொன்+ ஆம்+ காண்+ நீ இதை உண்டால் உடல் பொன்னாகும் என்பது பொருள். நன்கு



கிளைத்து படரும். வீட்டுத் தோட்டங்களில் கீரையாக பயிரிடலாம். தினந்தோறும் இதனை சமைத்துண்ண கண்களுக்கு குளிர்ச்சி உண்டாகும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய்க்கு சிறந்ததாகும்.

❖ கண் குறைபாடு உள்ளவர்கள் சுத்தமான பச்சை இலைகளை நன்றாக கழுவி அரைத்து சிறிய எலுமிச்சம்பழமளவு 40 நாட்கள் உண்டு வர கண் குறைபாடு நீங்கும்.

❖ போன கண்ணுக்குப் பொன்னாங்கண்ணி, பொன்னாங்கண்ணி அத்தனையும் பொன் என்பவை பழிமொழிகள்.

இதை காய கற்பமாக உண்ணலாம். இதில் தங்கச்சத்து அதிகமாக காணப்படுகிறது. இதனால் உடலிலுள்ள கலங்களை முதிர்ச்சியுறச் செய்யாது என்றும் இளமைத் தோற்றத்தை பேண இது முக்கிய பங்காற்றி வருகிறது.

### இதன் 100 கிராம் கீரையில் அடங்கியுள்ள சத்துக்கள்

| | |
|---|---|
| ★ நீர்ச்சத்து | 77.4 g |
| ★ புரதம் | 5 g |
| ★ கொழுப்பு | 0.7 g |
| ★ கரி நீரகை | 14.4 g |
| ★ தாது உப்புக்கள் | 2.5 g |
| ★ சுண்ணாம்பு | 510 mg |
| ★ பொஸ்பரஸ் | 60 mg |
| ★ இரும்பு | 16.7 mg |
| ★ உயிர்ச்சத்து A | 3210 IU |
| ★ உயிர்ச்சத்து C | 17 |

அதாவது பொன்னாங்காணி கீரையில் ஆரோக்கியத்துக்கு வேண்டிய சத்துக்கள் இருப்பதை விஞ்ஞான முறையிலும் கண்டு பிடித்துள்ளார்கள்.

❖ கீரைகளை அரிந்து நெடுநேரம் காற்றாட விட்டு அதன்பின் சமைக்கக்கூடாது. இவ்வாறு செய்தால் அதிலுள்ள உயிர்ச்சத்துக்கள் நீங்கி சுவையும் குறைந்து விடும். முடி கருமையாக வளருவதற்கும் முடி நீண்டு வளரவும் இளநரையை தடுக்கவும் பொன்னாங்காணி சேர் தைலத்தை உபயோகிக்கலாம்.

| | |
|---|---|
| ➢ பொன்னாங்காணிச்சாறு | 2800 ml |
| ➢ சின்ன வெங்காயச்சாறு | 1400 ml |
| ➢ பசுவின் பால் | 2800 ml |
| ➢ இளநீர் | 1400 ml |

இவ்வளவையும் நல்லெண்ணெய்/ தேங்காய் எண்ணெய் 2800 ml கலந்து அதிமதுரம் 70 g பசுவின் பால் விட்டரைத்து கற்கமாக்கி மேற்படி எண்ணெயில் கலந்து அடுப்பேற்றி மெழுகு பதத்தில் இறக்கி காய விட்டு தலைக்கு தேய்த்து வர இளநரை பொடுகு நீங்கி தலைமயிர் நன்கு கருமையடையும்.

### பொன்னாங்கண்ணி கீரை சூப் தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| ✦ நாட்டுப் பொன்னாங்கண்ணிக் கீரை- 1கப் | |
| ✦ தேங்காய் துருவல்- | 1 மூடி |
| ✦ சோம்பு- | 1 ஸ்பூன் |
| ✦ கிராம்பு- | 2 துண்டு |
| ✦ கசகசா- | 1 ஸ்பூன் |
| ✦ ஏலக்காய்- | 1 |
| ✦ துவரம்பருப்பு- | 50g |
| ✦ சின்ன வெங்காயம் பொடியாக அரிந்தது- | 1 கப் |
| ✦ தக்காளி- | 3 |
| ✦ மல்லி விதை- | 4/5 ஸ்பூன் |
| ✦ உப்பு தேவையான அளவு | |
| ✦ எலுமிச்சம்பழம்- | 1 |
| ✦ பசு நெய்- | 4/5 ஸ்பூன் |
| ✦ மிளகு- | 1 1/2 ஸ்பூன் |
| ✦ பூண்டு- | 4 பல் |
| ✦ இஞ்சித்துண்டு- | 1 |
| ✦ கறிவேப்பிலை | |
| ✦ மல்லி - | தழை |

### செய்முறை

தேங்காய் துருவலை நன்கு அரைத்து சோம்பு கடைசியாக வைத்து அரைத்து நீரில் கரைத்து ஊற்றவும். வெங்காயம் அரிந்து பாதியளவு கழனி நீரில் போடவும். தக்காளியில் இரண்டை அரிந்து போடவும். உப்பைப் போடவும். துவரம் பருப்பை வேகவைத்து கடைந்து சூப்பில் போடவும். கீரையை அலசி பொடியாக அரிந்து போட்டு வேக விடவும். மல்லியை மசிய அரைத்து சூப்பில் போடவும். வாணலியில் நெய் ஊற்றி சோம்பு பொடி செய்து போட்டு சிவந்ததும் கசகசாவை தூளாக பொடியாக்கி போட்டு வறுக்கவும். பூண்டைத் தட்டிப்போட்டு இஞ்சியை அரைத்து, வெங்காயம் போட்டு வதக்கி ஒரு தக்காளியையும் போட்டு வதக்கி கறிவேப்பிலை, மல்லி இலை இவற்றை கரைத்து சேர்த்து எல்லாவற்றையும் கொதிக்க விடவும். கடைசியாக எலுமிச்சை சாறு பிழிந்து ஊற்றி மிளகுத் தூள் போட்டு கலக்கி- காலை/மாலை/ மதியம் பருகி வர பல நோய்களிலிருந்து விடுபடலாம்.

சூப்பை இறக்கி வைத்து பசு நெய் 4/5 ஸ்பூன் போட்டு கலக்கவும். இதனால் வயிற்றுப்புண், வாய்ப்புண், கண்களில் புதிய ஒளி, உடல் சூடு, ஜீரண சக்தி, விழி ரோகம், வாத தோடம், தேகச் சூடு, மூலச்சூடு தீருவதோடு கண் நல்ல பார்வையை அடையும், பெண்களின் தலைமுடி நன்கு கறுத்து நீண்டு அடர்ந்து வளரும்.

### பொன்னாங்காணி கீரை வெண்ணெய் அவியல்

| | |
|---|---|
| ⅄ நாட்டுப் பொன்னங்கண்ணி–1 கப் | |
| ⅄ வெண்ணெய்- | 50g |

### செய்முறை

பொன்னாங்கண்ணிகீரையைமண் இன்றி, பழுப்பு இன்றி அலசி இரண்டிரண்டாக அரியவும். இக்கீரையை வேகவிடவும் உப்புக் கூடாது.

கீரை வெந்ததும் இறக்கி வைத்து சாதத்தில் வெண்ணெய் 50 g அப்படியே போட்டு பிசைந்து சாப்பிடவும். இவ்வாறு 40 நாட்கள் சாப்பிட வேண்டும். இதனால் கண் வியாதிகள் தீரும். இரும்புச்சத்தும் அதிகம் உள்ளது. இக்கீரையில் பொன் சத்தும் உள்ளதால் முகம் அழகு பெறும். விழிரோகம், தேகச்சூடு, மூலரோகம் தீரும். கண் புகைச்சல், கண்காசம், புரைகள், கண் கூச்சல் பறந்தோடும். இக் கீரையை உண்பவர்கள் கண் டாக்டரை தேடி ஓட வேண்டியதேயில்லை.

குறிப்பு:-

இதில் குறிப்பிட்டுள்ள வெண்ணெய்க்கு பதிலாக நெய்யினை பயன்படுத்துவது சிறந்தாகும். நெய் ஒரு சிறந்த தீபனமாகும். உணவை இலகுவாக சமிபாடு அடைய செய்யும். அத்துடன் நெய்யில் விற்றமின் A,D சத்துக்கள் நிறைய உள்ளதால் சிறுவர்களின் கண் பார்வைக்கும் அவர்களின் மூளை வளர்ச்சிக்கும் பெரியவர்களின் வாத சம்பந்தமான நோய்களுக்கும் சிறந்ததாகும். சாதாரணமாக நாம் வீட்டில் பயன்படுத்தும் தேங்காய் எண்ணெய்/ நல்லெண்ணெய்க்கு பதிலாக நெய்யினை பயன்படுத்துவதால் நற்பலன்களை பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப, அசுப திருஷ்டி

கண்திருஷ்டி என்றால் கண்பார்வை என்று பொருள். கண் என்பது மனிதனின் ஓர் முக்கிய புலன் உறுப்பு. திருஷ்டி என்றால் பார்வை என்று அழைக்கப்படும்.


மனிதனின் ஐம்புலன்களில் வெளியுலகப் பொருட்களை காண்பதற்கு பயன்படும் உறுப்பே கண்! கண்களின் செயல்பாட்டிற்கு ஒளி என்ற வெளிச்சம் கண்டிப்பாக தேவை. அந்த ஒளி இயற்கையாகிய சூரிய ஒளியாக இருந்தாலும் சரி, ஒளி என்பது கண்பார்வைக்கு இன்றியமையாதது. எனவே, ஒளி இன்றி கண்கள் செயற்படா!

மேலும் கண்கள் ஒளியை உட்கவரும் தன்மையுடையதாக இருக்கிறது. ஒளியை உட்கவருவதோடு மட்டுமல்லாது ஒளியை வெளியிடுவதற்காகவும் அமைந்துள்ளது அதன் அமைப்பு! ஆம், கண்களிலிருந்து ஒருவித ஒளிக்கற்றை வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இது இமைகள் கணநேர மூடலின் போது மட்டும், சிறிது கணம் நிறுத்தப்படுகிறது. கண் இமை மூடும் போது எவ்வாறு வெளிப்பார்வை தடைப்படுகிறதோ அதேபோல் கண்ணிலிருந்து வெளிவரும் கதிர் வீச்சும் தடை செய்யப்படுகிறது. இவ்வாறு கண்ணிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்களின் தன்மைகள், குணங்கள், செயற்பாடுகள் எல்லாம் கண்ணின் சொந்தக்காரரின் மன நிலையைப் பொறுத்தே அமைகிறது.

**என்ன அத்தகைய மனநிலை?**

மனம் என்பது பல்வகையான எண்ணங்களின் தொகுப்பு. எனவே, எண்ணங்களை அடிப்படையாக வைத்தே ஒருவரின் மனநிலையை நிர்ணயிக்க முடியும்.எண்ணங்களை அதன் விளைவுகளைப் பொறுத்து நல்ல எண்ணங்கள்,கெட்ட எண்ணங்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

கண்ணிலிருந்து வெளிவரும் ஒளிக்கற்றையானது மனதில் தோன்றும் எண்ணங்களுக்குத் தகுந்தாற்போல்



குணபேதங்களை அடைகிறது. கண்ணின் ஒளிக்கற்றையைத்தான் திருஷ்டி என்ற பரிபாஷையில் அழைக்கப்படுகிறது.

**கண் திருஷ்டி**

கண்ணின் ஒளிக்கதிர் தன்மையைப் பொறுத்து கண் திருஷ்டி இரு வகைப்படும்.

1.சுப திருஷ்டி(நன்மையளிப்பது)

2.அசுப திருஷ்டி(தீமைகள் பயப்பது)

நல்ல எண்ணங்களின் விளைவாக ஏற்படுவது சுப திருஷ்டி. கெட்ட எண்ணங்களின் விளைவாக ஏற்படுவது அசுப திருஷ்டி.

**கண் திருஷ்டி தோஷம்:**

கோபம், பொறாமை, குரோதம், விரோதம், பகைமை போன்ற விஷ எண்ணகள் கொண்ட மனம் படைத்தோரின் கண்களிலிருந்து வெளிவரும் நச்சுக்கதிர்களுக்கு தோஷங்கள் விளைவிக்கும் அபார சக்தி உண்டு. இத்தகையோரின் கண்பார்வையே கண் திருஷ்டி தோசம் என்றழைக்கப்படுகிறது.

விஷ எண்ணங்களின் காரணமாக வெளிவரும் கண் ஒளிக்கதிர் வீச்சுகளும் விஷத்தன்மை வாய்த்ததாகவே இருக்கும். இது இயற்கை. காரணம் மனதிற்கும் கண்களுக்கும் நேரடித் தொடர்பு உண்டு.

**சூரியன்**

உலகம் இயங்குவதற்கு முக்கிய காரணம் சூரியன். இது யாவரும் அறிந்த ஓர் அரிய அறிவியல் உண்மை. இருந்த போதிலும் சூரியனிடமிருந்து வரும் வெள்ளொளி நிறப்பிரிகை செய்யும் போது கிடைக்கும் VIBGYOR இல் அகச் சிவப்பு மற்றும் புற ஊதாக் கதிர்வீச்சுகள் மனிதன் மற்றும் ஏனைய ஜீவராசிகளுக்குத்

## ஜோதிடக்களம்

தீங்கு விளைவிக்கும் தன்மை உள்ளதாக இருப்பதை மறுக்கலாகாது.

இது ஓசோன் (O3) என்ற இயற்கை கவசத்தால் தடுத்து காத்து இந்தப் பூமியும் அதிலுள்ள உயிர்களும் இரட்சிக்கப்படுகின்றன.

உயிர்காரகன், பிதாகாரகன் என்று போற்றப்படுகின்ற சூரியனின் கதிர் வீச்சுகளிலேயே நச்சுக்கதிர்கள் இருக்கும் பட்சத்தில் ஏன் மனிதக் கண்களின் கதிர்வீச்சில் நச்சுத்தன்மை இருக்காது? ஆம் ஒரு விதத்தில் மனிதனின் வலது கண் சூரியன், இடது கண் சந்திரன் என்று சோதிட சாஸ்திரம் பகர்கிறது.

**யாரால் யாருக்கு திரஷ்டி தோசம் ஏற்படும்**

பிறரின் வாழ்க்கை வளர்ச்சிகள், முன்னேற்றங்கள், உயர்வுகள், நல்ல நிலைமைகள் போன்றவற்றைக் கண்டு, நம்மால் இவ்வாறு இருக்க முடியவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சும் பொருமலும் பொறாமையும் கொண்டு கெட்ட எண்ணங்கள் பலவற்றின் ஒட்டுமொத்த உருவமாக திகழ்பவரின் கண்பார்வையிலும் பேச்சிலும் கொடிய விஷத் தன்மைகள் நிரம்பி காணப்படும்.

இத்தகையோரின் கண்பார்வையே திருஷ்டி தோசமாக பிறரை பாதிக்கச் செய்கிறது.

வெற்றியாளர்களுக்கும் சாதனையாளர்களுக்கும் சாமான்ய மனிதர்களால் திருஷ்டி தோசம் ஏற்படுவது இயல்பு.

# சிப்பிக்குளம் வீதியின் பாலம் தரமற்ற விதத்தில் புனரமைப்பு

## மக்கள் விசனம் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள சிப்பிக்குளத்தின் ஊடாக தந்திரி மலை செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் தரமற்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ளமையினால் போக்குவரத்தின் போது பெரும் இடையூறை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் ,

மதவாச்சி செட்டிக்குளம் வீதியில் அடப்பன் குளத்திற்கு அண்மையில் உள்ள இராணுவ முகாமிற்கு அருகாமையில் தந்திரி மலை நோக்கி செல்லும் பிரதான வீதியில் சிப்பிக் குளத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பிராதான பாலமானது நீர் வடிந்தோடுவதற்கும் மழைகாலங்களில் பிரயாணம் செய்யக்கூடிய வகையிலும் அமையப்பெறாமையினால் ஆண்டாண்டு காலமாக தாம் போக்குவரத்துக்கு பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

இத்துடன் இப்பாலம் அமைக்கப்படும் போது அப்பகுதி மக்களிடம் நீரோட்டம் மற்றும் அபிப்பிராயம் கேட்கப்படாமையினாலேயே இவ்வாறாக போக்குவரத்துக்கு தகுதியற்ற விதத்தில் இப்பாலம் அமையப் பெற்றதாகவும் அவர்கள் குற்றம் சுமர்த்துகின்றனர்.

எனவே, இப்பாலத்தினை சீரமைத்து மழை காலங்களிலும் மக்கள் போக்குவரத்து செய்யக்கூடிய வகையிலும் சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-266)

# கடன் பெற்ற வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேற்றம்

## தொழில் அமைச்சர் காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் முதலீட்டு சபையின் அனுமதியுடன் வர்த்தக முயற்சிகளை ஆரம்பித்த சுமார் 10 வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையின் அரச வங்கிகளில் பெற்ற சுமார் 5 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை திருப்பிச் செலுத்தாமல் நாட்டில் இருந்து வெளியேறி விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக வெளிநாட்டு நிறுவனங்கள் அளவுக்கு அதிகமான கடன்களை பெற்றுள்ளன. இதனையடுத்து பணியாளர்களுக்கு சம்பளங்கள் மற்றும் வரிகள் என்பவற்றை செலுத்தாமலேயே பல நிறுவனங்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இவற்றில் பெரும்பாலானவை ஆசிய நிறுவனங்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையின் அரச வங்கிகளில் கடன்களை பெறும் நடைமுறையில் கட்டுப்பாடுகள் இருந்தன. எனினும் பின்னர் அதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் அவை தளர்த்தப்பட்டன. (அ-2)

# தமிழர்களுக்கு இனியும் அவலம் ஏற்படக்கூடாது

## மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர்

இலங்கையில் தமிழர்களுக்கு இனியும் அவலம் ஏற்படக்கூடாது. எனவே, எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் இன்னல் தீர உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்.

தமது எதிர்கால தமிழினச் சந்ததியினரைப் பாதுகாக்க முழு மூச்சாகக் களமிறங்க வேண்டும் எனவும் அவர் இதன்போது அழைப்பு விடுத்தார். (அ-2)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மார்கழி மாத வெளியீடான *ஞானச்சுடர்* வெளிவந்துள்ளது.

இந்நூலானது அர்ச்சனையும் துதியும் திருவண்டப்பகுதி, கந்தரநுபூதி, ஸ்ரீரமண நினைவலைகள், சிறுவர்கதைகள், சைவ சமய வினாவிடை, திருமந்திரக் கதைகள், படங்கள் தரும் பதிவுகள் போன்றனவற்றை தாங்கி வந்துள்ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புக்கள் மீண்டும் வன்முறையை ஏற்படுத்த முயற்சி

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



யுத்தம் முடிவடைந்து மூன்றாண்டு காலம் நிறைவு பெற்றுள்ள இவ்வேளையில் புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புக்கள் மீண்டும் இலங்கையில் வன்முறைகளை தூண்டுவதற்கு முயற்சி செய்வதற்கு இடமளிக்காத வகையில் ஒரு பாரிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி திட்டத்தை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாண்டில் அமுலாக்கவுள்ளார்.

பாதுகாப்பு செயலாளரின் யோசனை மற்றும் ஆலோசனைக்கு அமைய இந்தப் பாரிய நகர அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹூலுகல்ல தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு இவ்வாண்டில் கொழும்பு நகரத்திற்கு மேலதிகமாக மேலும் 20 நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு இவ்வாண்டில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் ஓரங்கமாகவே இந்த 20 நகரங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம், எஹலியகொட, தியத்தலாவ, இமதூவ, ஊறுபொக்க, கண்டி, நுவரெலியா, நாரம்மல், ஹெட்டிபொல, பண்டுவஸ்நுவர, அநுராதபுரம், மாத்தறை, தங்கொட்டுவ, பண்டாரவளை, வீரகெட்டிய, ரம்புக்கன, நுகேகொடை, மீகஹகியுல, புளத்சிங்கள, ஹோமாகமை மற்றும் மொரட்டுவ ஆகிய 20 நகரங்கள் இவ்வாண்டில் அபிவிருத்தி செய்யப்படும்.

நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்த 20 நகரங்களின் அபிவிருத்திப் பணிகள் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படும். பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கான பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சும் நகர அபிவிருத்தி அமைச்சும் தீர்மானித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து எங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு துணை புரியும்போது அவர்களுக்கு பூரண பாதுகாப்பு அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதுகாப்பு அமைச்சு கடந்த சில ஆண்டுகளாக இலங்கைக்கு வருகை தந்த இலட்சக்கணக்கான வெளிநாட்டவருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

நாட்டின் முன்னேற்றத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் இத்தகைய அழுத்தங்கள் பற்றி உண்மை நிலையை சர்வதேச ரீதியில் எடுத்துரைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்று லக்ஸ்மன் ஹூலுகல்ல தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ் தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புக்கள் மீண்டும் நாட்டுக்குள் புகுந்து பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் நல்வாழ்வுக்கு தீங்கிழைக்கக் கூடிய கப்பம் எடுப்பவர்கள், சிறுபிள்ளைகளை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்தல், போதைவஸ்து வியாபாரம், ஆட்கடத்தல், பெண்களை பாலியல் ரீதியில் துன்புறுத்தல் போன்ற குற்றமிழைப்பவர்களை கைது செய்வதற்கு நாடெங்கிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளவதற்கும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு சென்று ஐ.நா. சபையின் அமைதிப்படைகளில் பணி புரிவதற்கும் இலங்கை பாதுகாப்பு படையினருக்கு கூடுதலான வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும் பாதுகாப்பு செயலாளர் நடவடிக்கை எடுக்கவுள்ளார். (அ-2)

# காலி கடற்பரப்பில் கப்பல் தடுத்து வைப்பு

(கொழும்பு)

ஈரானிய கப்பல் கம்பனி ஒன்றின் கப்பலை இலங்கை அதிகாரிகள் கடந்த 14 ஆம் திகதியிலிருந்து தடுத்து வைத்துள்ளனர்.

ஜேர்மனிய வங்கியிலிருந்து 250 மில்லியன் யூரோ கடன் பெற்று வாங்கப்பட்ட எம்.வி. சியர் எனும் பெயரில் பதிவு செய்யப்பட்ட இக்கப்பல் வங்கிக்குரிய கடன் பணத்தை கட்டவில்லை. அத்துடன் கப்பலின் பெயர் சட்ட விரோதமாக எம்.வி.அமினா என மாற்றப்பட்டுள்ளதையடுத்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கப்பலில் 8 இந்தியர்களும் 16 ஈரானியர்களும் ஊழியர் களாக பணியாற்றுகின்றனர். எனினும் கப்பலில் வேலை செய்யும் இந்தியர்கள் தமது ஒப்பந்த காலம் முடிவடைந்துவிட்டதால் வேலை செய்ய விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பாக இந்திய கப்பல் துறை அமைச்சருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் தங்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் இந்திய ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கப்பல் சீனாவிலிருந்து கடந்த நவம்பர் 18 ஆம் திகதி புறப்பட்டு வந்து காலி துறைமுகத்திற்கு அருகில் நங்கூரமிடப்பட்டு நின்றபோதே அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவை மீளக்கூட்ட முடியாது - சுசில்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் இதனால் மீளக் கூட்ட முடியாது என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மீளவும் கூடி குற்றவியல் பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்த முடியாது.

பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைகள் நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கடமைகள் பூர்த்தியாகியுள்ளன.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றிற்கு உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்றம் விவாதம் நடத்த வேண்டுமென சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ-2)

# சீன, இந்திய பொருட்களினால் உற்பத்தியாளர்கள் பாதிப்பு

சீன மற்றும் இந்திய பொருட்களினால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மிகவும் மலிவான விலையில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிடமிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆடைகள், காலணிகள், இசைக்கருவிகள் போன்றன சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் மிகவும் மலிவான விலையில் கிடைக்கப்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பலர் இந்த பொருட்களை இறக்குமதி செய்து உள்நாட்டு சந்தையில் விநியோகம் செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக சிறிய அளவில் முயற்சியாண்மையில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

# கொழும்பில் மூன்று பாரிய ஹோட்டல்கள்

## 2,887 மில்லியன் டொலர் முதலீடு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் வெளிநாட்டவர்களின் நேரடி முதலீடு 64 சதவீத வளர்ச்சி கண்டிருப்பதாக பொருளாதார · அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு வருட காலப்பகுதிக்குள் மாத்திரம் 5 ஆயிரத்து 26 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் பாரிய மூன்று விடுதிகளை அமைப்பதற்கும் தூர இடங்களில் விடுதிகளை நிர்மாணிப்பதற்குமென தற்போது 2 ஆயிரத்து 887 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் 45 மாடிகளுக்கான விடுதி ஒன்றினை அமைப்பதற்காக 170 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இவொன் ரிசோட் கம்பனியுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஓசியானிக் டெவலப்மன்ட்டினால் 30 அடுக்கு மாடிகளுடனான விடுதி நிர்மாணிப்பதற்காக 244 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மேலும் இந்து வேர்ஷன் டெவலப்மன்ட் 70 அடுக்கு மாடிகளுடனான ஹோட்டலுக்காக 111 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கு மேலதிகமாக அம்பாறை, அநுராதபுரம், பதுளை, அம்பாந்தோட்டை, நுவரெலியா, யாழ்ப்பாணம், களுத்துறை, பொலநறுவை உள்ளிட்ட பல பிரதேசங்களில் 233 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதற்காக 2 ஆயிரத்து362 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது என அவர் [illegible]


**CIMA-UK Registration fee free- MCS இல் மட்டுமே**

பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் அன்றி **CIMA** கற்க விரும்பும் அனைத்து மாணவர்களுக்கும் **CIMA- Registration payment** ஐ தள்ளுபடி செய்வதற்கான ஒழுங்கு **MCS** இல் கற்க விரும்பும் மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

* இதன் மூலம் £70 ஐ அதாவது **Rs 15500** ஐ சேமிக்க முடியும்
* புதிய பிரிவு ஆரம்பம் 5.1.2013
* குறிப்பு1:-ஒரு **Batch** இல் 20 மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள். தனிப்பாட அனுமதி உண்டு.
* குறிப்பு2:- 2013 **May operational level** பரீட்சை எடுக்க விரும்பும் மாணவர்கள் **Foundation Level** இல் குறிப்பிட்ட பாடங்களை 28.02.2013 பூர்த்தி செய்யாவிட்டால் 2013 **May** பரீட்சைக்கு தோற்ற முடியாது. அவ்மாணவர்களுக்கு விசேட பிரிவு ஆரம்பம் 10.1.2013

தொடர்புகளுக்கு **MCS-CIMA Division**

**324,Palaly road,Jaffna, 772395895**

(கி/1990)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஈழத்தமிழ் அகதிகளை சிறப்பு முகாமில் அடைப்பதா?

## கேள்வியெழுப்புகிறார் நெடுமாறன்



(புதுடில்லி)

செங்கல்பட்டு அரச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 10ஆவது நாளாக உண்ணா விரத மிருக்கும் இலங்கை அகதிகளை தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் சந்தித்து ஆறுதல் கூறி உடல்நலம் விசாரித்துள்ளார்.

இதுகுறித்து தெரியவருவதாவது,

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள அகதிகள் 16 பேர் தங்களை திறந்தவெளி முகாமுக்கு மாற்றக்கோரி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களின் உடல்நிலை சோர்வடைந்ததால் 9பேர் செங்கல்பட்டு அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அங்கும் அவர்கள் தங்களது உண்ணாவிரதத்தை தொடர்ந்து வருகிறார்கள். இதையடுத்து அவர்களை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் சந்தித்து ஆறுதல்கூறி உடல்நலம் விசாரித்தார். அதனைத்தொடர்ந்து பழ. நெடுமாறன் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கைத்தமிழர்கள் இந்தியாவுக்குள் எந்தத் திகதியில் வந்தனர் என்ற ஆதாரம் மத்திய அரசிடம் இல்லை.

அகதிகளாக வந்த அவர்கள் மீது சாதாரண வழக்குகள் போட்டு சிறப்பு முகாம் என்ற பெயரில் வழக்கு முடிந்த பின்னரும் சிறைக் கைதிகளாக வைப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.

இப்பிரச்சினையில் தமிழக அரசு தலையிட்டு சிறப்பு முகாமில் உள்ள இலங்கை தமிழர்களை விடுதலை செய்து திறந்த வெளி முகாமுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன் என்றார். (அ-2)

# அணு உலைக்கெதிரான போராட்டம் தொடரும்

## கூடங்குளம் எதிர்ப்பாளர்கள் தெரிவிப்பு

(சென்னை)

கூடங்குளம் அணு உலைக் கெதிரான போராட்டம் கடைசிமூச்சுள்ள வரை தொடரும் என போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயக் குமார் உறுதியளித்துள்ளார்.

கூடங்குளம் பகுதியைச் சேர்ந்த கடைசிக்குழந்தைகூட தமது நிலமும் வளமும் அழிக்கப்படுவதை எதிர்த்துப்போராடும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப்புத்தாண்டை இடிந்த கரை போராட்டக்களத்தில் கொண்டாட அழைப்பு விடுத்துள்ள அவர் அணுசக்திக்கு எதிரான போராட்டம் 500 நாட்களைத் தாண்டியுள்ளதாக தெரிவித்தார்.

இதனிடையே சமூக ஆர்வலர் பிணாயக்சென், சட்டத்தரணி பிரசாந்த் பூஷண், ஓய்வு பெற்ற கடற் படைத் தளபதி அட்மிரல் ராம்தாஸ் உள்ளிட்ட ஏராளமானோர் இடிந்த கரை போராட்டக்களத்திற்கு வந்துள்ளனர். இவர்கள் சிறப்பு நிகழ்ச்சிகளில் உரையாற்ற உள்ளனர்.

முன்னதாக திருவனந்தபுரத்தில் பேசிய அட்மிரல் ராமதாஸ், அணு உலை எதிர்ப்பாளர்களுக்கு வெளிநாட்டு நிதியுதவி வந்ததாக கூறிய மத்திய அரசால் அந்தக்குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை என்றார். (அ-2)

## 1000 பக்கங்களில் குற்றப்பத்திரிகை

டில்லி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் 1000 பக்கங்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை வரும் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என டில்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டில்லி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் இந்தக் குற்றப்பத்திரிகையில் 30 பேர் சாட்சியங்களாக சேர்க்கப்பட்டுள்ள அதேவேளை குற்றவாளிகளுக்கு அதிகபட்சமாக மரணதண்டனை வழங்க வலியுறுத்தப்படும் என்று விசாரணை அதிகாரிகள் கூறியுள்ளனர். (அ-2)

# மெக்சிக்கோவில் 9 பேர் சுட்டுக்கொலை: போதைப் பொருள் கும்பல் அட்டூழியம்

கொலம்பியாவில் விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற பெண்கள் உட்பட 9 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொலம்பியாவின் தலைநகர் பகூட்டாவில் வடமேற்கே உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 4 பெண்கள் உட்பட 9 பேர் விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மறுநாள் காலையில் அங்கு வேலைக்குச் சென்ற நபர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

விரைந்து வந்த காவலர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்த சடலங்களை கைப்பற்றி பரிசோதனை நடத்தினர்.

போதைப்பொருள் கும்பல்களுக்கு இடையே நடந்த மோதல் காரணமாகவே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தகவல் கொடுப்பவருக்கு 11 ஆயிரம் டொலர் பரிசளிக்கப்படும் என்று அரசு நிர்வாகம் கூறியுள்ளது. (அ-2)



மியன்மார் நாட்டின் ஜனநாயக தலைவர் ஆன் சாங் சூகி, தேர்தலில் வெற்றி பெற்ற தொகுதிக்கு சென்று ஆதரவாளர்களை சந்தித்ததை படத்தில் காணலாம்.

## மியன்மார் புத்த பிக்குகள் தாய்லாந்திற்கு பரிமாற்றம்

தாய்லாந்தில் புத்தபிக்குகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து விட்டதால் மடாலயங்கள் மூடப்பட்டுள்ளன.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பஞ்சாயத்து தலைவர் போலவும் திருமணம், மரணம் போன்ற நிகழ்வுகளுக்கு சடங்கு செய்பவர்களாகவும் இவர்கள் வலம் வந்தனர்.

பிக்குகளின் சமூகவிரோத செயற்பாடுகள் காரணமாக இளைஞர்கள் யாரும் புத்த மடாலயங்களுக்கு பயிற்சி பெற வராததால் பல மடாலயங்கள் புத்த பிக்குகள் இல்லாமல் மூடப்பட்டு விட்டன. இந்நிலையில் அண்டை நாடான மியன்மாரில் புத்த மடாலயங்களில் இளைஞர்கள் அதிகம் உள்ளனர். எனவே அங்கிருந்து இளம் பத்த பிக்குகளை வரவழைக்க தாய்லாந்து அரசு திட்டமிட்டுள்ளது.

# பாலியல் குற்றத்துக்கு தூக்கு; ஆதரவு தெரிவித்தார் 'ஜெ'

பாலியல் குற்றத்திற்குத் தூக்குத் தண்டனைமற்றும்வேதியியல்முறை ஆண்மை நீக்கம் ஆகியவற்றிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பாலியல் வன்முறைகள் தொடர்பாக மாநிலத்தில் பெண்களிடம் அச்ச உணர்வு ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கற்பழிப்பு வழக்குகள் பெண் உதவி ஆய்வாளர் மூலம் விசாரணை நடத்தப்படும். பாலியல் வன்முறைகளைத் தடுக்கும் விதமாக குண்டர் சட்டம் திருத்தப்படும். பாலியல் பலாத்காரத்திற்கு உட்படும் பெண்களின் மருத்துவ செலவுகளை அரசே ஏற்கும்.

மேலும் கற்பழிப்பு குற்றத்திற்கு தூக்குத்தண்டனை மற்றும் வேதியியல் முறை ஆண்மை நீக்கம் ஆகியவற்றிற்கு அவர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

டில்லியில் பாலியல் வன்கொடுமையில் உயிரிழந்த மாணவி குடும்பத்துக்கு 15 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

டில்லியில் கடந்த 16ஆம் திகதியன்று ஓடும் பேருந்தில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட மாணவி சிகிச்சை பலனின்றி கடந்த 29ஆம் திகதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பெண்களின் ஆடை பற்றிய கருத்துக்கு அரசியல் கட்சிகள் கண்டனம்

(சென்னை)

பெண்களின் ஆடைச்சுதந்திரம் பற்றி மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை எற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூரில் செய்தியாளர்களை சந்தித்த அருணகிரிநாதர் ஆடைக் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தால் மட்டுமே பெண்கள் பாலியல் வன்கொடுமைகளிலிருந்து தப்பமுடியும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்தக்கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்திய ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் நேற்று முன்தினம் மதுரை ஆதீனம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆதீனமடத்தை முற்றுகையிட்ட அவர்கள் அருணகிரிநாதருக்கு எதிராக முழக்கமிட்டனர். இந்தக்கருத்துக்கு அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட 30க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, பெண்களின் ஆடைச் சுதந்திரம் குறித்த மதுரை ஆதீனம் அருணகிரிநாதரின் கருத்துக்குப் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் கூறுகையில், ஆடைகளால் தான் பெண்கள் பாலியல் வன் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று கூறுவதை ஏற்கமுடியாது என்று தெரிவித்தார்.

இதைவிட அதிகமாக ஆடைகளை வெவ்வேறு வகைகளில் அணிந்து நடிக்கிற திரைப்பட நடிகைகளுக்கும் இவ்வாறு நேர்வது இல்லை என்றார். மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஜி.ராமகிருஷ்ணன் கூறுகையில்,

தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் பாலியல் வன்கொடுமை நடப்பதற்கு அதற்கு பலியாகும் பெண்ணே காரணம் என்று கூறுவதுபோல் மதுரை ஆதீனத்தின் கருத்து உள்ளது. அவரது கருத்தை ஏற்கமுடியாது எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்தாலும் தனது கருத்தில் உறுதியாக இருப்பதாக மதுரை ஆதீனம் தெரிவித்தார். தான்கூறியதைபுரிந்துகொண்டால் இதுபோன்ற ஆர்ப்பாட்டங்களில் யாரும் ஈடுபடமாட்டார்கள் என்று ஆதீனம் குறிப்பிட்டார். (அ-2)

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண தமிழக அரசு ஒத்துழைக்கவில்லை

## அமைச்சர் நாராயணசாமி குற்றச்சாட்டு

இந்திய இலங்கை கடல் எல்லையில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கின்ற போதிலும் தமிழக அரசு இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று இந்திய மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு, தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தீர்வுகாணப்பட வேண்டும். இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை அரசு இந்தியாவுடன் பேச்சு நடத்தத் தயாராகவே உள்ளது.

ஆனால் தமிழக அரசு இந்த விவகாரத்தில் முழு ஒத்துழைப்பு அளிக்கவில்லை. இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து மத்திய அரசு தமிழக அரசுக்கு இரண்டு முறை கடிதம் எழுதியும் உரிய பதில் இல்லை.

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமல் இருப்பதற்கு தமிழக அரசே காரணம் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்களுக்காக சந்தோசப்படுங்கள். அதுதான் உங்களுக்குள் ஒளிந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்தும். -டோரா ஆர்பர்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மருத்துவர்கள் மீதான மாற்றுக்கண் பார்வை!

வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் அவர்கள் கைது செய்யப்பட்ட விடயம் தமிழ் மருத்துவர்களை அதிர்ச்சிக்கு உட்படுத்தியுள்ளது.

இலங்கையில் மருத்துவப் பட்டத்தை நிறைவு செய்கின்ற தமிழ் வைத்தியர்கள் இந்த மண்ணில் இருந்து சேவையாற்றுவதற்கு விருப்பமில்லாது நாட்டைவிட்டு வெளியேறி இருக்கின்ற சூழமைவில்,

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான தமிழ் மருத்துவர்களே தாம் பிறந்த மண்ணிற்கு சேவையாற்ற வேண்டும் என்ற பெருவிருப்போடு பணிபுரிந்து வருகின்ற இவ்வேளையில்,

தமிழ் மருத்துவர்களை நோக்கிய படைத்தரப்பின் சந்தேக பார்வை, மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை இந்த நாட்டின் ஒட்டுமொத்த சமூகமும் புரிந்து கொள்வது அவசியம்.

வட மாகாணம் முழுவதிலும் மருத்துவர்களின் எண்ணிக்கை பற்றாக்குறையாக இருக்கின்ற போது,

மருத்துவர்கள் மீது படைத்தரப்புக் கொள்கின்ற சந்தேகம் காரணமாக அவர்களைக் கைது செய்கின்ற நடவடிக்கை இங்கு கடமையாற்றுகின்ற மருத்துவர்களையும் வெளியேற்றுவதற்கான செயல் என்றே கருத வேண்டும்.

தென் பகுதியில் இருக்கக்கூடிய சிங்கள மருத்துவர்கள் தாராளமான வசதி வாய்ப்புகளுடனும் 'டாக்டர்' என்பதற்கான கௌரவத்துடனும் பணியாற்றுகின்றபோது,

அதே தகைமைப்பாடுடைய எங்கள் மருத்துவர்கள் அடிப்படை வசதிகளும் வளங்களும் இன்றி உயிர் காக்கும் பணியைச் செய்து வருகின்றனர்.

யுத்த கால சூழ்நிலையில் எங்கள் மருத்துவர்கள் சோதனைச் சாவடிகளில் கால்கடுக்க நின்று பயணம் செய்த கஷ்டங்கள் நிறையவே உண்டு.

இதுதவிர ஏ9 பாதை தடைப்பட்டிருந்த காலங்களில் எல்லாம் துவிச்சக்கர வண்டிகளில் பயணித்து தமது மருத்துவ சேவையை வழங்கிய அர்ப்பணிப்புடையவர்கள் எங்கள் மருத்துவர்கள்.

எறிகணை வீச்சு, காலத்திற்கு காலம் ஏற்படக்கூடிய இடப்பெயர்வு, பொருளாதாரத் தடையின் தாக்கம் என்பவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து வட புலத்தில் சேவையாற்றிய தமிழ் மருத்துவர்களின் பெரும் பணியை இலங்கை அரசுகள் புகழ்ந்திருக்க வேண்டுமாயினும்,

தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால் பல்வகைக் கஷ்டங்களின் மத்தியிலும் உயிர் காக்கும் உயரிய சேவை ஆற்றிய எங்கள் மருத்துவர்களின் பெருமை நாடறியச் செய்யப்படவில்லை.

பரவாயில்லை என்று விட்டுவிடலாம் என்றால்,

தமிழ் மருத்துவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது, அவர்களைக் கைது செய்வது என்ற செயற்பாடுகள் வெறுப்புத்தரக் கூடியவையாகவுள்ளன.

எனவே இத்தகைய செயல்களை தடுத்து நிறுத்த இந்த நாட்டின் மருத்துவ சமூகம் முன்வர வேண்டும்.

இல்லையேல், வட பகுதியில் கடமையாற்றும் மருத்துவர்களின் தீர்மானங்கள் புலம்பெயர்வாக அமையலாம்.

அந்த நிலை ஏற்பட்டால் வட பகுதியின் சுகாதார நிலைமை ஆபத்தானதாக அமையும்.

## புத்தாண்டுக் கொண்டாட்டம்

# கொழும்பில் திடீர் விபத்து காரணமாக 702 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை

(கொழும்பு)

புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது ஏற்பட்ட திடீர் விபத்து காரணமாக கடந்த 48 மணித்தியாலங்களில் 702 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 204 பேர் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுவருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ஆரியவன்ச தெரிவித்துள்ளார்.

எனினும் இவ் வருடம் பண்டிகை காலத்தில் ஏற்பட்ட திடீர் விபத்து ஓரளவு குறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த வருடம் புத்தாண்டு காலத்தில் வெளி[illegible]வில் 598 பேர் சிகிச்சை பெற்றதாகவும், இவ்வருடம் 498 பேரே சிகிச்சை பெற்றுள்ளதாகவும், இதன்மூலம் 17 சதவீத குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வருடம் 219 பேர் விடுதியில் தங்கிருந்து சிகிச்சை பெற்றதாகவும் இவ்வருடம் 204 பேரே தங்கியிருந்து சிகிச்சை பெறுவதாகவும் இதன் மூலம் 7 சதவீத வீழ்ச்சி காணப்படுவதாகவும் வைத்தியர் பிரசாத் ஆரியவன்ச குறிப்பிட்டார். (செ-11)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்.கோட்டை வட்டாரக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டமும் இவ் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவும் கடந்த 30ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண செயலகத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக செல்லையா விஜயரட்ணம், உப தலைவராக கா. ஜெய்சங்கர், செயலாளராக செ.குணசீலன், உப செயலாளராக கு.நவநீதன், பொருளாளராக சி.ருகுணாஸ் ஆகியோரும் மற்றும் 9 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதம விருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சிற்சபாநாதனும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ந.மதியழகராசாவும் யாழ். மாநகர சபை உறுப்பினர் இரா.சங்கையாவும் கலந்து கொண்டனர். (செ-9)

# பாலியல் வன்முறைகள் இந்தியாவில் அதிகரிப்பு

## ஐ.நா கவலை

இந்தியாவில் பாலியல் வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதற்கு ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், கற்பழிப்பு ஆகியவற்றை தடுப்பதற்கு ஆதரவு அளிக்கத்தயார் என்று, இந்தியாவில் உள்ள ஐ.நா.சபை ஒருங்கிணைப்பாளர் லிசி கிராண்ட் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் செயல்பட்டு வரும் ஐ.நாவின் யுனிசெப் நிறுவனம் டில்லியில் பாலியல் கொடுமையினால் பாதிக்கப்பட்டு மாணவி பலியான சம்பவத்திற்கும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இந்த பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் மூன்று பேரில் ஒருவர் குழந்தை என்றும், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 7200 குழந்தைகள் பாலியல் கொடுமைக்கு உள்ளாகி வருகின்றனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் அந்த நிறுவனத்தின் பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார். (செ-11)

## கற்[illegible] செயற்பாடுகள் இன்[illegible] ஆரம்பம்

[illegible]லை வட்டர்பிளை இன்ரநஷ ன[illegible]சாலையின் இவ் ஆண்டுக் கா[illegible]றல், [illegible]ற்பித்தல் செயற்பாடுகள் இ[illegible]தன்கிழமை ஆரம்பமாகிறது என வட்டர்ப[illegible] சர்வதேச பாடசாலையின் [illegible]ளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் புதிதாக அனுமதி பெற்ற [illegible]களையும் வருகை தருமாறும் அவர் கேட்டுள்ளார். (செ-9)

# மாலைதீவு மாணவிக்கு 5,000 ரூபாய் தண்டம்!

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 12 சிகரெட்டுக்களை வைத்திருந்தமைக்காக இலங்கையில் கல்விகற்று வரும் மாலைத் தீவு மாணவிக்கு கொழும்பு நீதிமன்றம் 5000 ரூபாய் தண்டம் விதித்து தீர்ப்பளித்தது.

மேற்படி மாணவி கொழும்பு 3 இல் உள்ள பெரிய கடையொன்றுக்கு அண்மையில் 12 சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இதன்போது இம் மாணவி சார்பில் ஆஜரான சட்டத்தரணி இப்பெண் சொந்த பாவனைக்காக தனது பையில் வைத்திருந்த சிகரெட்டுக்களையே பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் இவை சட்டவிரோத சிகரெட் அல்ல. இவர் இலங்கைக்கு வந்த போது சுங்கப் பிரிவினர் இவரை இரண்டு சிகரெட் பெட்டிகளை எடுத்துவர அனுமதித்தனர் என வாதிட்டார்.

இருப்பினும் தனது கட்சிக்காரர் குற்றத்தை ஒப்புக்கொள்ள தாயாராக இருப்பதனால் அவருக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்குமாறு அவர் நீதிமன்றில் கேட்டதற்கு இணங்க இவருக்கு நீதவான் 5000 ரூபாய் தண்டம் விதித்து தீர்ப்பளித்தார். (செ-11)

## பேருந்து சேவை பாதை மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் கிளிநொச்சி சாலையால் சேவையாற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் இருந்து மாங்குளம் ஊடாக முத்தையன்கட்டு வரை காலை 7.00 மணிக்கு 85/1 பாதையில் சென்ற பேருந்து சேவையானது நாளையிலிருந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரி வரை மட்டுப்படுத்தப்படவுள்ளது.

மேலும் மற்றைய பேருந்து சேவை முத்தையன்கட்டு அரச ஊழியர்களின் நன்மை கருதி 85/3 பாதையில் அதிகாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு பரந்தன், புதுக்குடியிருப்பு ஊடாக முத்தையன்கட்டு சென்று பிற்பகல் 2.30 மணிக்கு அதே பாதையூடாக யாழ்.நோக்கி புறப்படும் என இலங்கை போக்குவத்து சபையின் வட பிராந்திய பிரதான முகாமையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (செ-8)

## கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

Institute of Nursery Studies and Gender Development நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜனநாயகத்தினுடனும் உருமாறும் பிரச்சினைகளுடனும் நிலைத்து நிற்ககூடிய மந்த வளர்ச்சியின் தொடர் விளைவு என்னும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு[illegible]பகல் 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் ஒரு நவீனசிந்தனைப் பரிணாமத்தையும்,அரசுக்கும் வறுமைக்கிடையிலான ஒப்புதிய சமூக உடன்படிக்கையை நோக்கி என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது (அ)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### அமைதி கிடைக்கும் இடம்



இந்த யுகத்தின் அவதார புருசர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

அவர் இறைவனை அடையும் பொருட்டு உண்மையாக முயற்சி செய்யும் ஒவ்வொரு சாதகருக்கும் உதவி செய்து கொண்டிருக்கிறார். அவர் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

மனித வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம் அமைதியான மனநிலைதான் என்பதை உணர்த்துவதற்காகவே அந்த யுகத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தார்.

நேர்மையும் சிரத்தையும் பக்தியும் கொண்ட ஒருவன்தான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள் வட்டத்திற்குள் வரமுடியும். அங்குதான் இந்த யுகத்தில் அமைதியைக் காணமுடியும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் எந்தக்குறிக்கோளுக்காக மனித உருவத்தில் வந்தாரோ அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்பவர்கள் நிரந்தரமான மகிழ்ச்சியை அனுபவிக்கும் வாரிசுதாரர் ஆகிவிடுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ஆம் ஆண்டில் டெஸ்டில் மைக்கல் கிளார்க்கும், ஒரு நாள் போட்டியில் சங்கக்காராவும் அதிக ஓட்டங்கள் குவித்த பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளனர். புதிய ஆண்டு பிறந்துள்ள நிலையில், கடந்த ஆண்டு நடந்த சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் மற்றும் சாதனை படைத்தவர்கள் பற்றிய ஓர் அலசல் வருமாறு:



### டெஸ்ட் போட்டி

2012ஆம் ஆண்டில் மொத்தம் 42 டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன. அதிக வெற்றி பெற்ற அணி அவுஸ்திரேலியா. 11 டெஸ்டில் விளையாடிய அந்த அணி 7இல் வெற்றியும், ஒன்றில் தோல்வியும், 3இல் சமநிலையும் கண்டது. இந்திய அணி 9 டெஸ்டில் விளையாடி 3இல் வெற்றியும், 5இல் தோல்வியும் சந்தித்தது. ஒரு ஆட்டம் சமநிலை ஆனது. தோல்வியே பார்க்காத அணி தென்ஆப்பிரிக்கா. 10 டெஸ்டில் பங்கேற்று 5இல் வெற்றியும், 5இல் சமநிலையும் கண்டுள்ளது. இந்தியாவுக்கு எதிராக சிட்னி டெஸ்டில் அவுஸ்திரேலியா 4 விக்கெட்டுக்கு 659 ஓட்டங்கள் குவித்தது அணியின் அதிகபட்சமாகும். அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க்கும் (329* ஓட்டங்கள், இந்தியாவுக்கு எதிராக), தென்ஆப்பிரிக்க வீரர் அம்லாவும் (311* ஓட்டங்கள், இங்கிலாந்துக்கு எதிராக) முச்சதம் அடித்தவர்கள் ஆவர். இதில் கிளார்க், இந்த ஆண்டில் டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் (1595 ஓட்டங்கள்), அதிக சதங்கள் விளாசியவர் (5 சதம்) என்ற சிறப்புகளுடன் தரவரிசையிலும் 900 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். பந்து வீச்சாளர்களில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் ஹெராத் 10 டெஸ்டில் 60 விக்கெட்டுகளை அள்ளி முதலிடத்தை வகிக்கிறார். துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் முதல் 10 வீரர்களின் பட்டியலில் இந்திய வீரர்கள் யாருக்கும் இடம் கிடைக்கவில்லை. பந்து வீச்சில் அதிகபட்சமாக அஸ்வின் 37 விக்கெட்டுகளும் (8 டெஸ்ட்), அதிக பட்ச ஓட்டங்கள் பெற்றவர் என்ற வகையில் விராட் கோக்லி 689 ஓட்டங்களும் (9 டெஸ்ட்) எடுத்துள்ளனர். இன்னொரு வகையில் இந்தியாவுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. ஓட்டம் ஏதுமின்றி அதிகமுறை டக் அவுட் ஆன மோசமான சாதனைப்பட்டியலில் இந்தியாவின் சகீர்கானும், நியூசிலாந்தின் பிரேஸ்வெல்லும் (தலா 5 முறை) முதலிடத்தை பெற்றுள்ளனர்.



### ஒரு நாள் போட்டி

இந்த ஆண்டில் மொத்தம் 90 ஒரு நாள் போட்டிகள் அரங்கேறியுள்ளன. இதில் அதிக வெற்றிகளை பெற்ற அணியாக இலங்கை (33 ஆட்டம், 14 வெற்றி, 16 தோல்வி, ஒரு சமநிலை, 2 முடிவில்லை) இருந்தாலும், வெற்றி சதவீதத்தில் இங்கிலாந்து முதலிடம் பிடித்துள்ளது. அந்த அணி 15 ஆட்டத்தில் விளையாடி 12இல் வெற்றியும், 2இல் தோல்வியும் கண்டுள்ளது. ஒரு ஆட்டத்தில் முடிவு கிடைக்கவில்லை. இதன் வெற்றி சதவீதம் 85.71. இதனால் தான் இங்கிலாந்து ஐ.சி.சி. ஒரு நாள் போட்டி அணிகள் தரவரிசையில் முதலிடத்தில் நீடிக்கிறது. இந்திய அணி 17 ஆட்டங்களில் ஆடி அதில் 9இல் வெற்றியும், 7இல் தோல்வியும், ஒன்றில் சமநிலையும் சந்தித்துள்ளது. சிம்பாவேக்கு எதிராக நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுக்கு 373 ஓட்டங்கள் குவித்தது ஓர் அணியின் அதிகபட்சமாகும். ஓட்டங்கள் குவிப்பில் இலங்கை வீரர் சங்கக்காரா (1184 ஓட்டங்கள்) முதலிடத்தில் உள்ளார். ஆசிய கிரிக்கெட்டில் பாகிஸ்தானுக்கு எதிராக விராட் கோலி 183 ஓட்டங்கள் விளாசியது தனிநபர் அதிகபட்சமாகும். இந்த வருடம் அதிக சதங்கள் (5 சதம்) எடுத்தவரும் விராட் கோலி தான். யோக்கர் வீசுவதில் கில்லாடியான இலங்கை வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா 47 விக்கெட்டுகளை சாய்த்து பந்துவீச்சில் முதலிடம் வகிக்கிறார்.

### 20 ஓவர் கிரிக்கெட்

இந்த ஆண்டில் நடந்துள்ள 20 ஓவர் கிரிக்கெட்டுகளின் எண்ணிக்கை 82. இதில் இந்தியா 14 ஆட்டத்தில் விளையாடி 8இல் வெற்றியும், 6இல் தோல்வியும் தழுவியுள்ளது. நியூசிலாந்தின் பிரண்டன் மெக்கல்லம் (123 ஓட்டங்கள்), தென்ஆப்பிரிக்காவின் ரிச்சர்ட் லெவி (117 ஓட்டங்கள்), நியூசிலாந்தின் மார்ட்டின் கப்தில்(101 ஓட்டங்கள்), ஸ்காட்லாந்தின் பெற்றிங்டன் (100 ஓட்டங்கள்) ஆகியோர் சதம் அடித்து இருக்கிறார்கள். நியூசிலாந்தின் மார்ட்டின் கப்திலும் (472 ஓட்டங்கள், 13 ஆட்டம்), இந்தியாவின் விராட் கோலியும் (471 ஓட்டங்கள், 14 ஆட்டம்) அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களில் முதல் இரு இடங்களில் உள்ளனர். விக்கெட் வீழ்த்தியதில் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மலுக்கு (25 விக்கெட், 16 ஆட்டம்) முதலிடம் கிடைத்துள்ளது.

### சிக்சர் மற்றும் விக்கட் காப்பாளர்

சிக்சர் மன்னர்களாக டெஸ்டில் இங்கிலாந்தின் கெவின் பீட்டர்சனும் (17 சிக்சர், 14 டெஸ்ட்), ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவின் கீரன் பொல்லார்ட்டும் (26 சிக்சர், 17 ஆட்டம்), 20 ஓவர் போட்டியில் ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்சனும் (28 சிக்சர், 11 ஆட்டம்) திகழ்கிறார்கள். நிறைய பேரை ஆட்டம் இழக்கச் செய்த விக்கெட் காப்பாளரில் டெஸ்டில் இங்கிலாந்தின் மேத் பிரையரும் (36 பேர் அவுட்), ஒரு நாள் போட்டியில் ஆஸ்திரேலியாவின் மேத்யூ வேட்டும் (34 பேர் அவுட்), 20 ஓவர் கிரிக்கெட்டில் இந்தியாவின் டோனியும் (14 பேர் அவுட்) கலக்கியிருக்கிறார்கள்.



# 2012 கிரிக்கெட்

## ஓர் மீள்பார்வை

(டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் போட்டிகள், T-20 போட்டிகள்)

### டெஸ்டில் அதிக ரன்கள் குவித்தவர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | ஓட்டங்கள் |
|---|---|---|---|
| கிளார்க் | ஆஸ்திரேலியா | 11 | 1595 |
| குக் | இங்கிலாந்து | 15 | 1249 |
| அம்லா | தென்ஆப்பிரிக்கா | 14 | 1053 |
| ட்ராட் | இங்கிலாந்து | 15 | 1005 |

### ஒரு நாள்போட்டியில் அதிக ரன்கள் குவித்தவர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | ஓட்டங்கள் |
|---|---|---|---|
| சங்கக்கரா | இலங்கை | 31 | 1184 |
| தில்ஷன் | இலங்கை | 31 | 1119 |
| கோக்லி | இந்தியா | 17 | 1026 |
| சன்டிமால் | இலங்கை | 30 | 845 |


### டெஸ்டில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| ஹெராத் | இலங்கை | 10 | 60 |
| ஸ்வான் | இங்கிலாந்து | 14 | 59 |
| ஆண்டர்சன் | இங்கிலாந்து | 14 | 48 |
| பிலாண்டர் | தென்ஆப்பிரிக்கா | 9 | 43 |
| சிடில் | ஆஸ்திரேலியா | 8 | 41 |

### ஒரு நாள் போட்டியில் அதிக விக்கெட் வீத்தியவர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| மலிங்கா | இலங்கை | 32 | 47 |
| சுனில நரின் | மே.இ.தீவு | 17 | 34 |
| பெரேரா | இலங்கை | 23 | 32 |
| அஜ்மல் | பாகிஸ்தான் | 17 | 31 |
| குலசேகரா | இலங்கை | 28 | 28 |

## இந்திய மகளிர் கிரிக்கெட் அணி யின் தலைவராக மிதாலி ராஜ்



உலக கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியின் தலைவராக மிதாலி ராஜ் நியமிக்கப்பட்டார். பெண்கள் உலக கோப்பை தொடர் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகிறது. இறுதியாட்டம் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி மும்பையில் நடைபெறும். இந்தியாவில் நடைபெறும் இத்தொடரில் மொத்தம் 8அணிகள் பங்கேற்கின்றன. "ஏ பிரிவில் இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை அணிகள் இடம்பெற்றுள்ளன.

"பி பிரிவில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்ரிக்கா அணிகள் பிரிவு பெற்றுள்ளன. முதல் போட்டியில் இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதுகின்றன. இதற்கான, இந்திய அணி, அறிவிக்கப்பட்டுள்ளது. அணியை மிதாலி ராஜ் வழிநடத்துகிறார்.

## வங்கதேச அணி பாகிஸ்தானுக்கு செல்லாது

பாதுகாப்பு காரணங்களுக்காக பாகிஸ்தானுக்கு செல்லப்போவதில்லை என வங்கதேச கிரிக்கெட் அணி முடிவு செய்துள்ளது.

வங்கதேச கிரிக்கெட் சபையின் தலைவர் நஜ்முல் ஹாசன் கூறுகையில், இந்த மாதம் பாகிஸ்தானுக்கு சென்று அந்நாட்டு அணியுடன் வங்கதேச அணி விளையாட இருந்தது.

பாகிஸ்தானில் தற்போது நிலவும் சூழ்நிலைகளால் வீரர்களுக்கு போதிய பாதுகாப்பு அங்கு இல்லை. எனவே அங்கு செல்வதில்லை என முடிவு செய்துள்ளோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3-வது டெஸ்ட் உணர்வுபூர்வமாக அமையும் - பீற்றர் சிடில்

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி உணர்வுபூர்வமானதாக அமையும் என எதிர்பார்ப்பதாக அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் பீற்றர் சிடில் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும், அவுஸ்திரேலியாவோடு நெருங்கிய உறவுகளைக் கொண்டவரும், அங்கு வசித்து வந்தவருமான ரொனி கிரேய்க்கின் மரணம், அவுஸ்திரேலிய அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசியின் இறுதி டெஸ்ட் போட்டி ஆகியன காரணமாக வே அப்போட்டி உணர்வுபூர்வமானதாக அமையும் என பீற்றர் சிடில் தெரிவித்துள்ளார்.



ரொனி கிரேய்க், மைக்கல் ஹசி பற்றிய செய்திகளை அறிவதற்கு ஏமாற்றகரமானதாக அமைந்ததாகத் தெரிவித்த பீற்றர் சிடில், அதன் காரணமாக இலங்கை அணிக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டி உணர்வுபூர்வமானதாக அமையும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இளைய வீரர்கள் ரொனி கிரேய்க் கிரிக்கெட் உலகிற்கும், அவுஸ்திரேலிய கிரிக்கெட்டிற்கும் ஆற்றிய சேவைகளைப் பற்றி அறிந்திருக்கமாட்டார்கள் எனத் தெரிவித்த பீற்றர் சிடில், அவரது இழப்பு கவலை தருவதாகத் தெரிவித்தார்.

சிட்னி போட்டியில் அவுஸ்திரேலிய அணி ரொனி கிரேய்க், மைக்கல் ஹசி இருவரையும் கௌரவிக்கும் முகமாகப் போட்டியில் பங்குபற்றும் எனத் தெரிவித்த பீற்றர் சிடில், சிறப்பான பெறுபேறு குறித்து எதிர்பார்ப்புடன் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

# கரம் சுற்றுப் போட்டி யாழ்.பல்கலை சம்பியன்

(மல்லாகம்)

யாழ்ப்பாணம் கரம் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கரம் சுற்றுப்போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி வெற்றிபெற்று சம்பியனாகியது. யாழ்பாணம் கரம் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட மேற்படி போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது. இப்போட்டியின் இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியும் உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதியது. இரு அணி வீராங்கனைகளும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய போதிலும் இறுதி நேரத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 3-2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகினர். (21)

# சந்தர்ப்பத்தை பயன்படுத்தாதது வருத்தமளிக்கிறது -சங்கக்கார

அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணிக்கும் அவுஸ்ரேலியா அணிக்குமிடையிலான பொக்சிங் டே டெஸ்ட் போட்டியில் இலங்கை யணி மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியமை குறித்து வருத்தமடைவதாக இலங்கை அணியின் குமார் சங்கக்காரா தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி பொக்சிங் டே டெஸ்ட் போட்டியில் 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பங்குபற்றியதில்லை என்ற நிலையில் மெல்போர்ன் போட்டி முக்கியமாக அமைந்திருந்தது.

எனினும் அப்போட்டியில் இலங்கை அணி ஓர் இனிங்ஸ் மற்றும் 201 ஓட்டங்களால் படு தோல்வியடைந்திருந்தது.

அது குறித்த கருத்து தெரிவித்த குமார் சங்கக்கார, மெல்போர்ன் போட்டி மிகப் பெரிய [illegible]பமாக அமைந்ததாகவும், ஓர் அணி[illegible]க அனைவரும் அப்போட்டியின் திறமை வெளிப்பாடுகள் தொடர்பாக மிகவும் வருத்தமடை ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மெல்போர்னில் வெளிப்படுத்திய திறமையைவிடச் சிறப்பான திறமையை வெளிப்படுத்தும் திறமை இலங்கை அணிக்கு உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

அப் போட்டியில் போட்டித்தன்மையை வழங்குமளவிற்கு இலங்கை அணியின் துடுப்பாட்டம் அமைந்திருக்கவில்லை எனத் தெரிவித்த குமார் சங்கக்கார, அதற்கான பொறுப்பை அணியாக ஏற்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இவ்வாறான விடயங்கள் கிரிக்கெட்டில் இடம்பெறுவதுண்டு எனவும் தெரிவித்தார்.

மெல்போர்ன் போட்டியில் முதல் இனிங்ஸில் அரைச்சதம் பெற்ற குமார் சங்கக்கார டெஸ்ட் போட்டிகளில் தனது 10,000 ஓட்டங்களைப் பூர்த்திசெய்ததோடு, இரண்டாவது இனிங்ஸில் விரலில் காயமடைந்து சத்திர சிகிச்சைக்குள்ளாகியுள்ளதால் இத் தொடர் முழுவதும் இனிமேல் பங்கு பெறமாட்டார் என்பது குறிப் பிடத்தக்கது.



# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக!

(மல்லாகம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினரால் 22 ஆவது ஆண்டாக நடத்தப்படுகின்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வெற்றிக்கிண்ணத்திற்கான 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் விண்ணப்படிவங்களை கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தில் பெற்று எதிர்வரும் 5ம் திகதிக்கு முன்பாக விண்ணப்ப படிவங்களை பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (21)

# கொல்கத்தாவில் இந்தியா-பாக். மோதல்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது.

சென்னையில் நடந்த முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி அபாரமாக வெற்றி பெற்று 1-0 என முன்னிலையில் உள்ளது.

இரண்டாவது போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில நாளை 3-ம் திகதி நடக்கிறது.

போட்டிக்காக இரு அணி வீரர்களும் கொல்கத்தா சென்றுள்ளனர்.

கொல்கத்தா மைதானம் பாகிஸ்தானுக்கு சாதகமாகவே இதுவரை அமைந்திருக்கிறது.


இந்தியாவில் நடந்த அனைத்துப் போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

இதனையடுத்து 8 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவும்-பாகிஸ்தானும் இந்த மைதானத்தில் மோதுகின்றன.

2004ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி கடைசியாக இந்தியாவும், பாகிஸ்தானும் மோதிய போது இந்திய அணியில் சச்சின், ராவிட் போன்ற முன்னணி வீரர்கள் இருந்தனர்.

ஆனால் இப்போது முன்னணி வீரர்கள் எல்லாம் ஓய்வுபெற்ற பின்னர் சேவாக் மற்றும் யுவராஜ் மட்டும் களத்தில் உள்ளனர்.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்த வரை கடைசியாக இன்சமாம் தலைமையில் களமிறங்கியது.



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் பங்கேற்க, கோல்கட்டா விமான நிலையம் வந்த, இந்திய அணியின் ரெய்னா.

இந்த அணியிலும் தற்போது யூனிஸ் கான், சொய்ப் மலிக், கம்ரான் அக்மல் ஆகியோர் மட்டுமே ஆடுகின்றனர்.

மற்ற வீரர்கள் அனைவரும் புதுமுகங்கள். எனவே கொல்கத்தா போட்டியில் சரித்திரம் மாறலாம்.

இந்திய அணியின் இளம் வீரர்கள் பாகிஸ்தானை வீழ்த்த வேண்டும் என்ற முனைப்புடன் இருக்கிறார்கள். அதேபோன்று பாகிஸ்தானும் கொல்கத்தா மைதானத்தில் வெற்றியை தக்க வைத்துக் கொள்ள தீவிரமாக முயற்சி மேற்கொள்ளும் எனவே நாளை நடைபெறும் போட்டியில் பாகிஸ்தான் அணிவெற்றி பெற்று தொடரைக் கைப் பற்ற தீவிரமாக களமிறங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.



அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் மற்றும் மைக்கல் ஹசி ஆகியோர் அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட்டை சிட்னியில் சந்தித்துக் கலந்துரையாடியபோது...



இந்தியாவுக்கு எதிரான, இரண்டாவது ஒரு நாள் போட்டியில், சாதிக்க, பயிற்சியில் ஈடுபட்ட முகமது இர்பான் உள்ளிட்ட பாகிஸ்தான் அணி வீரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டிலாவது...

வேறு பக்கமாக திசை திருப்ப முன்னர் நாங்கள் யதார்த்தத்தை ஒப்புக்கொண்டு எங்களிற்குள் உள்ள பேதங்களை மறந்து ஒரேயணியாக செயற்பட தன்னை முற்றுமுழு தாக அர்ப்பணித்துச் செயற்படும் என அதன் சமூகச் செயற்பாட்டிற்கான ஆலோசகர் சுரேஸ் தர்மா தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகளவையையும் உலக ஒழுக்கின் முக்கிய பலமாகத் திகழும் நாடுகளையும் இந்த விவகாரத்திலிருந்து விலகாமல் வைத்திருப்பதற்கான ஒரேயொரு வழி தமிழ் அமைப்புக்களிடையே ஏற்படக் கூடிய ஒரு பொதுவேலைத்திட்டத்தின் மூலமே சாத்தியம்.

இலங்கை அரசே தமிழர்கள் இணைந்து வாழ்வதற்கான தடையாக இருக்கிறது என்பதையும் அதன் நடவடிக்கைகள் தொடர்ந்து தமிழர்களை இரண்டாந் தரப் பிரஜையாக வைத்திருக்கிறது என்பதையும், புரியவைப்பதற்கான தேவை புலம் பெயர்ந்த அமைப்புகளுக்கிடையிலான ஒற்றுமையை இன்றியமையாததாக்குகிறது.

இவ்வாறான பொதுவேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கும் அதற்கான பலா பலன்களை காலதாமதமின்றி பெறுவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதையே 2013-ம் ஆண்டிற்கான சபதமாக தனேடிய மனித வுரிமை மையம் ஏற்றுக்கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)

# இலங்கையின் நீதித்...

தலைமை நீதிபதி ஷிராணி பண்டார நாயக்க மீது கொண்டு வரப்பட்டுள்ள பதவி நீக்க நடவடிக்கைகள் குறித்து கவலை வெளியிடும் போதே, நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் சுதந்திரத்துக்கான ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி கேப்ரியேலா கனூல் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையில் நிர்வாகத் துறையும் நாடாளுமன்றமும் தலைமை நீதிபதியை பதவி நீக்கம் செய்ய எடுத்து வரும் முயற்சிகள் அங்கு நீதித்துறை மீது தொடர்ச்சியாக நடைபெற்று வரும் தாக்குதலின் உச்சக்கட்டம் என்றும் கேப்ரியேலா கனூல் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

நீதித்துறை தனது சுயாதீனத்தை உறுதிப்படுத்த முன்வந்ததாலேயே அதன் மீது தொடர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களும், அவர்களின் பணிகளில் தலையிடுவதும் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு இலங்கையில் அதிகரித்துள்ளன.

ஷிராணி பண்டாரநாயக்க மீதான விசாரணைகள் தெளிவில்லாமல் இருந்தது - நியாயமான ஒரு விசாரணைக்கான அடிப்படை உத்தரவாதங்கள் கூட அங்கு மதிக்கப்படாமல் இருக்கின்றது.

இலங்கை அரசியல் சாசனத்தின் 107-வது சட்டப்பிரிவு மற்றும் நாடாளுமன்ற நிலைக் குழுவின் உத்தரவு ஆகிய இரண்டையும் இணைத்துப் பார்க்கும் போது, அது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு புறம்பாக உள்ளது. இது 2003-ம் ஆண்டே மனித உரிமைகள் குழுவால் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையில் நீதிபதிகளின் சுயாதீனத் தன்மையை பாதுகாக்கவும், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளை தவிர்க்கவும், நாட்டின் அரசியல் சாசனத்தில் மாற்றம் தேவை.

நாட்டில் ஒவ்வொரு துறையும் தனி அதிகாரத்துடன் செயல்படும் வகையிலும் சர்வதேச மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலும், நீதிபதிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படும் போது அது சுயாதீனமான ஒரு ஆணையத்தால் அது நேர்மையாக நடத்தப்பட்டு, அது மதிக்கப்பட வேண்டும்.

நீதித்துறை எவ் வித மான வெளி அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், தலையீடுகள் இல்லாத வகையில் செயல்பட வழி ஏற்படுத்த வேண்டும் எனவும் கனூல் கோரிக் கை விடுத்துள்ளார். (செ-11)

தொழிற்கல்வி

குறுகிய காலத்தில் 100% தொழில் உத்தரவாதத்துடன் உயர்வருமானம் தரும் சான்றிதழ் பயிற்சி பாடநெறிகள்

Computer Repairing
Electrical Wiring
Mobile Phone Repairing

1. கனணி திருத்துதல்
2. வீட்டு மின் இணைப்பு
3. கையடக்க தொலைபேசி திருத்துதல்

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
பதிவுகளுக்கு 0777 444 225

# மருத்துவர்...

தீவு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படுவார் எனக் கூறப்பட்ட போதும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

இது தொடர்பாக வைத்தியரின் உறவினர்கள் கேட்ட போது, உத்தரவு வரவில்லை, விசாரணைகள் முடியவில்லை என பல காரணங்களை பொலிஸார் கூறியிருக்கின்றனர்.

எனினும் குறித்த வைத்தியரை வவுனியாவில் பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப் போவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

ஆனாலும் இதனை வைத்தியரின் உறவினர்களோ, வைத்தியர்களோ உறுதிப்படுத்தவில்லை. (செ-4)

# சகலரது தேவை...

கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது, மக்களுக்கு தற்காலிக அசௌகரியங்கள் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் வெகு விரைவில் நிறைவுறுத்தப்பட வேண்டும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (செ-11)

# கனேடிய அமைச்சர் கொழும்புக்கு விஜயம்

கனடாவின் குடிவரவு அமைச்சரும் கனேடிய குடிவரவுக் கொள்கைகளில் பல கடுமையான மாறுதல்களை மேற்கொண்டவருமான கனேடிய குடிவரவு மற்றும் பல் கலாசார அமைச்சர் ஜேசன் கெனி கொழும்புக்கு எதிர்வரும் 5-ம் திகதி சனிக்கிழமை விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். (செ-11)

# அரச ஊழிய...

நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் சேவை உயர் மட்டத்தில் இருக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி அரச ஊழியர்களிடம் கேட்டுக் கொண்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

2013-ம் ஆண்டு அரச சேவையாளர்கள் கடமையைப் பொறுப்பேற்கும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற போது ஜனாதிபதி செயலாளர் இவ்வாறு தெரிவித்தார். (செ-11)

# இலங்கை மீதா...

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான மனுக்கள் அனுப்பப்பட் மையை அடுத்தே அமெரிக்க அரசாங்கம் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் அறிக்கைகளை வெளியிட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்க துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இந்த இணையத் தளத்துக்கு 150,000 மனுக்கள் அனுப்பப்பட்டன. இவற்றுக்கு ஜனாதிபதி ஒபாமா, வீடியோ மூலமான பதில்களை வழங்கியுள்ளார். (செ-11)

A/L 2015
கலை, வர்த்தக
கணித உயிரியல் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

புவியியல் 2014 A/L
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
பொருளியற் கல்லூரி. யாழ் சனி, ஞாயிறு - 9-10
DCM சனி, ஞாயிறு 11-12
P.S.குமரன் B.A. (Hons)
தேர்ச்சி அடிப்படையிலான MCQ அமைப்பு வினாக்கள், பயிற்சிகள் செய்தல்

பதவி வெற்றிடம்

சோதிட அறிவுள்ள (முக்கியம் பாவக்கிரகங்கள் கணிக்கக்கூடிய) முகாமைத்துவ பெண் உத்தியோகத்தர்கள் தேவை.

தொடர்பு: 021 567 1532
நிர்வாக உத்தியோகத்தர்
கல்யாண மாலை
(சமூக சேவை அமைப்பு)
யாழ்ப்பாணம். (இ)

சரவணா ரெக்ஸ்
Saravana Tex

மலிவு விற்பனையின் போது அதிர்ஷ்ட சாலிகளாக நேற்று (01.01.2013) காலை 10 மணிக்கு குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்.





முதலாம் பரிசு
N. தேவகாந்தன்
பிரதான வீதி,
சாவகச்சேரி.

இரண்டாம் பரிசு
கெசிகா ரவீந்திரன்
N.S.B. திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு
வ.தர்சிகா
1199, K.K.S.வீதி
யாழ்ப்பாணம்.

நிர்வாகி
சரவணா ரெக்ஸ்
K.K.S.வீதி
யாழ்ப்பாணம்.
(C-1994)

NIRU
KONDAVIL
AL 2015
கலை வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம் 06.01.2013
ஞாயிறு காலை 7 மணி
(சி-1996)

BEACON
யாழ்.நகர்
A/L 2015 வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் : 5 ஜனவரி காலை 8 மணி
கணக்கீடு : R.சுகிர்தன் (B.Com)
பொருளியல் : K.பிரதீபன் (B.B.A)
வணிகக்கல்வி : K.செந்தூரன் (B.Com)
(1374)

2013 ஆம் ஆண்டுக்கான புதிய ஆங்கில, கணினி பாடநெறிகள் ஆரம்பம்
யாழின் முதன்மைக் கல்லூரியில் இணைவதனூடாக சர்வதேச தராதரங்களை வென்றிடுங்கள்
அனைத்துப் பாடநெறிகளும் ஆரம்பமாகின்றன...
05.01.2013 காலை 9.00 மணி

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான 6 மாத Cambridge Univercity யின் சான்றிதழுடன் கூடிய Diploma In English
உயர்கல்வி மாணவர்களுக்கான சர்வதேச சான்றிதழ்களுடன் கூடிய Diploma In English
வெளிநாட்டு விசாக்களுக்கான ஆங்கில பாடநெறி மற்றும் அதற்கான பரீட்சைகள்.
தரம் 04 - 08 வரையான மாணவர்களுக்கான SPOKEN ENGLISH COURSE
Computer Courses (50% கட்டணக் கழிவுடன் பாடநெறிகளைத் தொடருங்கள் CSS ISO 9001 - 2008)
Spoken Sinhala Courses (04 months) (1371
0774924166/ 0777364362/ 0770610271
E-CITY College Of English
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
பிரதான வீதி, சங்கானை (மல்லாகம்சந்தி முன்பாக)

Deutsch, Dutch, French, English
2013 புதிய வகுப்புகள் விபரம்
ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்
தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் 04.01.2013 ஆரம்பமாகின்றன.
மேலும் Londen செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
தொடர்பு: விவேகானந்தா அக்கடமி
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel Hotline: 0774842464
(சி-1992)

A/L - 2015
(கலை, வர்த்தகம்)
ஜனவரி 5
காலை 9 மணிக்கு
DMI
Jaffna

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org